
GOKULAM

கோகுலம்



ரூ.6/-

ஏப்ரல் 2003


"அம்மா, பால் உடம்புக்கு ரொம்ப நல்லது. இன்னும் கொஞ்சம் கிடைக்குமா ?"
அறிமுகம் புதிய கேட்பரி டிலைட். இதில் அற்புதமான கேட்பரி சாக்லேட்டின் சுவை அடங்கியுள்ளது. ஒரு கிளாஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு முழு டீஸ்பூன் அளவு போட்டு கலக்குங்கள். பிறகு பாருங்கள் அதிசயத்தை ! பால் என்றாலே முகம் சுளிக்கும் உங்கள் குழந்தை பாலுக்கு ஃப்ரெண்டாகி விடும்.
Delite
நான் பாலை ருசிகரமாக்க விரும்புகிறேன்.
பெயர்:
முகவரி :
அன்புள்ள ரீடெயிலரே, கேட்பரி டிலைட் ஒரு ஜார் வாங்கும் வாடிக்கையாளரிடமிருந்து முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை பெற்றுக்கொண்டு, தயவு செய்து அவருக்கு ரூ. 6/-தள்ளுபடி தரவும். நீங்கள் கேட்பரி டிஸ்ட்ரிபியூட்டரிடம் இந்த கூப்பனை கொடுத்து ரூ. 6/-ம் ஹேண்ட்லிங் சார்ஜாக 50 பைசாவும் பெற்றுக் கொள்ளுங்கள்.
இச்சலுகை தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த நகரங்களில் மட்டுமே. ஏப்ரல் 30, 2003 வரையே.
இச்சலுகை சரக்கு உள்ள வரையே.
கேட்பரி இண்டியா லிமிடெட்டிற்கு கேட்பரி டிலைட் பேக்குகளை ரீடெயிலரிடமிருந்து வாங்கியதற்கான அத்தாட்சியை சரிபார்க்க உரிமை உண்டு.

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்

ஏப்ரல் 2003 மலர் : 21 இதழ் : 3

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

விளையாட்டு அரங்கம்



* சமிந்தா



* டெண்டுல்கர்



* அக்ரம்

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஏழு, ஏழு நாடுகள் கொண்ட இரண்டு அணிகளாக லீக் போட்டிகள் விளையாடப்பட்டன. இதில் ஆஸ்திரேலியா ஆறு போட்டிகளிலும் வென்று 12 புள்ளிகளை எடுத்தது. கென்யா 10 புள்ளிகளும், இந்தியா 8 புள்ளிகளுடன் முதல் மூன்று இடங்களைப் பிடித்து சூப்பர் சிக்ஸ்க்கு முன்னேறின. நியூஸிலாந்து, ஜிம்பாப்வே, இலங்கை அணிகளும் சூப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழைந்தன.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தென் ஆப்பிரிக்கா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கு இந்தியத் தீவுகள் அணிகள் லீக் போட்டிகளுடன் திரும்ப வேண்டியதாகிவிட்டது.

உலகக் கோப்பை போட்டியில் அதிக ரன்களைக் குவித்தவர் சச்சின் டெண்டுல்கர். இதுவரை சமிந்தா வாஸ் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். ஒரு தினப் போட்டிகளில் வாசிம் அக்ரம் 500 விக்கெட்டுகளைச் சாய்த்து சாதனை படைத்திருக்கிறார்.

ஜிம்பாப்வே அணியில் விஷார்ட் நமீபியாவிற்கு எதிராக 172 ரன்களைக் குவித்து தனிநபரில் அதிக ரன்கள் எடுத்தவராகிறார். ஜிம்பாப்வே நமீபியாவிற்கு எதிராக 342 ரன்களை எடுத்தது. இதுவே அதிகபட்ச ஸ்கோர்.


மிகவும் குறைவான ஸ்கோர் 36. இது இலங்கைக்கு எதிராகக் கனடா எடுத்த ஸ்கோர். ஆஸ்திரேலியா நமீபியாவை 256 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது. இதுவே உலகக் கோப்பை மற்றும் ஒரு நாள் போட்டிகளின் அதிக வெற்றி வித்தியாசம்.

இலங்கையின் சமிந்தாவாஸ் ஹாட்ரிக் சாதனை புரிந்தார். வங்க தேசத்திற்கு எதிரான போட்டியில் இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. கென்யா முதல் முறையாக சூப்பர் சிக்ஸ்க்குள் நுழைந்துள்ளது.

கனடாவின் டேவிசன் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் 67 பந்துகளில் சதமடித்து புதிய உலகக் கோப்பை சாதனை புரிந்தார். கனடா சார்பாக எடுக்கப்பட்ட முதல் சதமும் இதுதான்.

இந்த ஆறு நாடுகளில் நான்கு நாடுகள் அரையிறுதிக்கு முன்னேறி அதில் இரண்டு நாடுகள் இறுதிக்குச் செல்ல உள்ளன. மார்ச் 23ந் தேதிக்குக் காத்திருப்போம். சமிந்தா வாஸ், வாசிம் அக்ரம் போஸ்டர் 40ஆம் பக்கத்தில்.

என்.மாதவன்



கோமான் கொசு அண்ணாச்சி!

“குண்டூசி இடைவெளில தப்பிச்சு வந்தம்பா” என்றவாறே வந்தார் ஒரு கொசு அண்ணாச்சி.

“என்ன குண்டூசி கேப்புலயா!” ஆச்சரியமானார் பாதித் தூக்கத்திலிருந்த மற்றொரு கொசு.


இதற்குள் “ஐயோ! மேல உட்கார்ந்து கடிக்கக் கூட இல்ல. அடிச்சுட்டான். அம்மா! கை போச்சே, கால் போச்சே” என்றவாறு நொண்டியடித்துக் கொண்டு வந்தார் அடுத்தவர்.

“எது எப்படியோ, முதலில் இவரைக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்ப்போம்” என்று கூறி விட்டு மருத்துவமனைக்கு விரைந்தனர். மருத்துவ மனையில் அடிபட்ட கொசு அண்ணாச்சியைச் சேர்க்க, கையிலும் காலிலும் பேண்டேஜுகள் ஏறின. கால் மேலே தூக்கிக் கட்டப்பட, முனகிக் கொண்டிருந்தார்.

அடிபட்டவரைக் காண பல்வேறு சொந்தக்காரர்கள் வந்து சேர்ந்தனர்.

“ஏம்பா, இந்த மனுசங்க நம்மள வாழவிட மாட்டாங்க போல இருக்கு. நாம வாழறதே ஏதோ ஒரு வாரத்திலிருந்து முப்பது நாள் தான். அது வரைக்கும் கூட சுகமாக வாழ முடியலைன்னா எப்படி? பாரு, நம்ம தோஸ்து கால், கையை உடைச்சுட்டாங்க. பாவம்! அவங்கவங்க பாட்டுக்கு இரத்தம் உறியறதே பெரிசா இருக்கு. இதுல இவனுக்கு வேற இரண்டு மி.லி. இரத்தம் வேணுமாம். என்ன பண்றதுன்னு தெரியலை” என்றது ஒரு சொந்தக்காரக் கொசு!

“ஆமா. அதுக்குத்தான் முன்னாடியே சொன்னேன். நாமெல்லாம் சேர்ந்து மனுசங்க மாதிரி இரத்த வங்கி ஏதாவது வைச்சுக்கலாம்னா யாராவது கேட்டீங்களா? இப்ப என்ன பண்றது?” பொறுப்புடனே பேசினார் ஒரு



கொசு ஆச்சி.

''யாரும்மா இது? இப்பதான் சொன்னேன். நாம வாழற பாட்டுக்கே இரத்தத்தைக் காணோம்னா, ப்ளட் பாங்க் தொறக்கலாம்கிற. உங்க உறவுக்காரன்ல ஒருத்தனை விட்டு வசூல் பண்ணச் சொல்லு" என்று கிண்டலடித்தார் ஒரு கொசு தாத்தா.

ஜோல்னாப் பையுடன் பறந்து வந்தார் ரிப்போர்ட்டர் கொசு தம்பி.

''என்னப்பா ரிப்போர்ட்டர், நீ எப்பவும் சூடான செய்திகளோடத் தானே வருவ, என்ன விஷயம் சொல்லு?" பரபரப்பாயினர் அனைவரும்.

"இங்கிருந்து நாலு கி.மீ. தொலைவில் ஒரு மலையடிவாரம் இருக்கு. அங்க நம்ம இனத் தவங்களுக்குப் பயிற்சி அளிக்க கோமான் கொசு வரவிருக்கிறார். யாருக்கெல்லாம் ஆர்வமிருக்கோ, அவங்க என் கூட கிளம்பி வரலாம்" எனப் பரபரப்பாகக் கூறிவிட்டு, நோயாளியின் அறைக்குப் பறந்தார்.


வி.ஐ.பி. போல பந்தாவுடன் வந்தவர் நோயாளியைப் பார்த்துவிட்டு, உடனடியாக, தனது கோஷ்டியினரோடு மலையடிவாரத்தை அடைந்தார். அங்கே கொசுக்களின் பல்வேறு கோஷ்டியினர் நிரம்பியிருந்தனர். யாரோ ஒருவர் மைக்கில் "இன்னும் சிறிது நேரத்தில் நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அகில உலக கொசுக்களின் நாயகன் 'கோமான் கொசு' தமது தனி விமானத்தில் தன்னந் தனியாக வந்திறங்குவார்"என்று விளம்பரம் செய்து கொண்டிருந்தார்.

அதிர்வேட்டுகள், தாரை தப்பட்டைகள் பல்வேறு வாகனங்கள் என்று எந்த பந்தாவு மில்லாமல் வந்திறங்கினார் கோமான் கொசு. காவலுக்கு மட்டும் சீருடையில் இரு இளைய கொசுக்கள் வந்தன. தமது தலைவனை ஈ போல மன்னிக்கவும், கொசுவாய் மொய்த்தன.

இதற்கிடையில், "கோமான் கொசு, வாழ்க வாழ்க! அகில உலக நாயகன் வாழ்க! வாழ்க!" என கோஷமிட்டனர்.

மேடையேறிய கோமான் கொசு பேசத் துவங்கினார்:

''என் இனிய கொசுக்களின் கூட்டமே, வாழ்வது கொஞ்ச காலமானாலும் வடுக்



களைப் பதிக்கும் கொடுக்குகளை உடையோரே, ஆறு நாளிலும், சாவு முப்பது நாளிலும் சாவு என்று கொள்கை முழக்கத்தோடு வீரச்சமர் புரிவோரே, சைஸும் வயசும் குறைவாயிருந்தாலும் எந்த வயதுடைய மனிதர்களையும் மிரட்டுவோரே, தனக்கென தனியிடம் கோராது எந்த இடத்திலும் வசிப்போரே, நன்னீரில் மட்டுமே வசித்து மலேரியாவைப் பரப்பும் மேட்டுக்குடி அனோஃபிலிஸ் வகையினரே, சேறு சகதியிலும், சாக்கடையிலும் வசித்து யானைக் கால் நோயினைப் பரப்புவோரே, மஞ்சள் சுரத்தைப் பரப்பும் ஏட்ஸ் வகையினரே, எல்லோருடைய இரத்தத்தையும் தனதாகவே மதித்து தன்னிடம் சேர்த்துக் கொள்வோரே... அவரே... இவரே..."

இதற்குள் சிலர் விசிலடித்து, "மேட்டருக்கு வா! தலைவா" என்றனர்.

"அதாவது நம்மை ஒழிக்க முடியாது என்ற பீதியை உலகம் முழுவதிலும் ஏற்படுத்தி விட்டோம். ஆனால் நமது இனத்தினர் தூக்கத்தை இழந்து, மக்களை நாடி சேவை செய்யும் இரவு நேரத்தில், வேதி மாத்திரைகளையும், வேதி திரவங்களையும் வைத்துக் கொடுமைப் படுத்துகின்றனர். எனவே அவற்றுக்கு எதிராக நாம் என்ன செய்ய முடியும் என்றுதான் பேசவந்துள்ளேன்.

"பொதுவாக இரவு நேரத்தில் தூங்கும் போதுதான் இவற்றை உபயோகிக்கின்றனர். எனவே மாலை நேரங்களில் மக்கள் ஆர்வமாகத் தொலைக்காட்சி தொடர்களைப் பார்க்கும் போது, மின்னல் வேகத்தில் நுழைந்து விட்டால் போதும். மக்கள் தீவிரமாகத் தொலைக்காட்சியைப் பார்க்கும் போது வலிக்காமல் உறிஞ்சுங்கள்!

"அடுத்ததாக இருட்டான அலுவலகங்களில் இருக்கையின் கீழே ஒளிந்து கொள்ளுங்கள். அலுவலர்கள் சாப்பாட்டுக்குப் பிறகு லேசாகக் கண்ணயரலாம். அப்போது இஷ்டம்போல பாய்ந்து, தாக்கி உறிஞ்சுங்கள்.

"எல்லாவற்றுக்கும் மேலாக திரையரங்கம் எந்த விதமான பாதுகாப்பு வளையமும் இல்லாத இடம். ஆதலால் வீடுகளை விட்டுத் திரையரங்குகளை நெருங்குங்கள். அங்கே நமக்கு ஏராளமான ஆசாமிகள் உள்ளனர். என்ன, நமது சகாக்கள் மூட்டைப் பூச்சிகள் இருக்கலாம். அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்."

இதற்குள் சிலர் கொட்டாவி விட, நிலைமையை அனுசரித்து, "எல்லோரும் பதினாறும்... மன்னிக்கவும், நூற்றுக்கணக்கில் பெற்று முப்பது நாட்களும் முழுவதுமாக வாழவும்" என வாழ்த்தி விட்டுப் பறந்தார்.

அவரது சகாக்களும் ஆளுக்கு ஒரு மூலையாகப் பறந்தனர்.



உணவு சம்மந்தமாகத் திரட்டப்பட்ட சுவையான தகவல்களை முதலில் பார்க்கலாமா?

ரப்பருக்கு மாற்றுப் பொருளாக தாமஸ் ஆடம்ஸ் என்பவர் உருவாக்கிய பொருள் தான், இன்று சூயிங்கம் ஆக பரிணமித்து, உலகெங்கும் மெல்லப்படுகிறது.

Hot dog என்பது நாயின் வகை இல்லை. அமெரிக்காவில் மிகவும் பிரபலமான ஓர் உணவு ஐட்டம்.

அடுத்து விளையாட்டுச் செய்திகள்:

தாய்லாந்தில் பட்டம் பறக்க விடுவது மிகப் பிரபலமான விளையாட்டு. அங்கே ஆண்டுதோறும் பல்வேறு அணிகளும் போட்டியிடும் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெறுகின்றன. போட்டிகளை நடத்த விதிமுறைகள், நடுவர், பரிசு எல்லாம் உண்டு.

கூடைப்பந்து முழுக்க முழுக்க ஒரு அமெரிக்க விளையாட்டு. 1891ல் மாசாசூசெட்ஸில் ஒய்.எம்.சி.ஏ பயிற்சிப் பள்ளியில் ஜேம்ஸ் நய்ஸ்மித் என்பவரால் உருவாக்கப்பட்டது.

ஆற்றில் டென்னிஸ் விளையாடினர்!



1876ல் லண்டனின் தேம்ஸ் நதி, கடும் குளிர் காரணமாக உறைந்து போனது. டென்னிஸ் பிரியர்கள், உறைந்த பனித் தரையில் டென்னிஸ் கோர்ட் உருவாக்கி, ஜாலியாக விளையாடினார்கள்.

வழக்கம் போல ஒரு புதிர் போடட்டுமா?

இரண்டு பாத்திரங்களில் தண்ணீர் வைக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு பெரிய பாத்திரத்துக்கு மாற்ற வேண்டும். மறுபடியும் பழையபடி இரண்டு பாத்திரங்களுக்கே மாற்ற வேண்டும். ஒரே ஒரு கண்டிஷன். முதலில் இருந்த மாதிரியே, அந்தந்த பாத்திரத்தில் இருந்த தண்ணீர், மறுபடி அதே பாத்திரத்துக்கு வந்து விட வேண்டும். அதை எப்படி செய்வது?

விடை: ஒரு பாத்திரத்தில் உள்ள தண்ணீரை ஐஸ் கட்டியாக உறைய வைத்து விடுங்கள். இன்னொன்றில் தண்ணீர் இருக்கட்டும். இரண்டையும் வேறு பாத்திரத்தில் ஊற்றி விடுங்கள். மறுபடி, தண்ணீரை ஒரு பாத்திரத்திலும், ஐஸ்கட்டியை இன்னொரு பாத்திரத்திலும் இருக்கும்படி மாற்றி விடுங்கள். அவ்வளவுதான்!

மலேரியா ஜுரம் பற்றித் தெரிந்து கொள்ளலாமா?

மனித இனத்தை பல நூறு வருடங்களாக துன்புறுத்தி வருகிற ஒரு நோய் மலேரியா. உலகம் முழுவதும்

ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான வர்கள் மலேரியாவுக்குப் பலியாகிறார் கள்.

1887ல் ரொனால்டு ராஸ் என்கிற பிரிட்டிஷ் டாக்டர், இந்தியாவில் பணி யாற்றிக் கொண்டிருந்த சமயத்தில்தான் அனோபெலிஸ் என்கிற கொசுவகையால் மலேரியா பரவுகிறது என்று கண்டு பிடித் தார்.



அதன்பின், மலேரியாவிலிருந்து காப் பாற்ற மருத்துவ ஆராய்ச்சி தீவிரமாய் ஆரம் பித்தது. 1939ல் ஸ்விஸ் நாட்டு விஞ் ஞானி பால் முல்லர், கொசுக்களை அழிக்க டிடிடி (DDT) என்ற மருந்தைக் கண்டு பிடித்தார்.

இந்த இரண்டு விஞ்ஞானிகளுமே தங்கள் கண்டுபிடிப்புகளுக்காக நோபல் பரிசு பெற்றார்கள்.

மாவீரன் நெப்போலியன் மரணத்துக்குக் காரணம் மலேரியாதான்!

இந்த இரண்டு படங்களில் முதலா வதைப் பாருங்கள். முகடுகளுடன் கூடிய ஒரு மலை தெரிகிறதா?

இரண்டாவது படத்தைப் பாருங்கள். மூக்கு, வாய், கண், உதடுகளுடன் ஒரு பிரம்மாண்டமான மனித முகம் தெரிகிறதா?

சரி! உங்களுக்கு ஒன்று தெரியுமா? இரண்டும் ஒரே படம்தான். முதல் படம் அகல வாட்டில் இருக்கிறது. அதைச் சற்று திருப்பி, உயரவாக்கில் பாருங்கள். அதுதான் இரண்டாவது படம்!

- சந்திரமௌலி

திருச்சி மாவட்டச் சிறப்பிதழ்

மார்ச், ஏப்ரல் இதழ்கள் மாவட்டச் சிறப்பிதழ்களாக மலர்ந்துள்ளன. திருச்சி மாவட்டச் சிறப்பிதழுக்கு உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். திருச்சி மாவட்ட பள்ளி மாணவ, மாணவியரே, மே இதழில் உங்கள் படைப்புகள் வெளிவர இருக்கின்றன.

அடுத்தது திருநெல்வேலி மாவட்டச் சிறப்பிதழ்

திருநெல்வேலி மாவட்ட பள்ளி மாணவ, மாணவியர் இப்பொழுதே உங்கள் படைப்புகளை அனுப்ப ஆரம்பிக்கலாம். கதைகள், கவிதைகள் துணுக்குகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்களை எழுதி அனுப்பலாம். இது தவிர திருவெல்வேலி மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசி தேதி 15.4.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.



பட்டில் வரைந்த

மலர்கள் தோறும் தேனருந்தி
மணக்கும் மலர்கள் நிறமேந்திப்
பட்டில் வரைந்த சித்திரமாய்
பட்டாம் பூச்சி வந்ததுவே!

எழிலாய்ப் பூக்கள் மேலமர்ந்த
இனிய வண்ணப் பூச்சியதை
விழிப்பாய்ப் பிடித்தான்
ஒரு சிறுவன்
விரலின் பிடியில் துடித்ததுவே!


சித்திரம்!

உயிராய்ப் பூச்சி இருக்கிறதா?
உயிரிழந்து கிடக்கிறதா?
துயரம் கொண்ட என்னிடமே
துடுக்காய்ச் சிறுவன் கேட்டானே!

இருக்குது உயிராய் என்றிட்டால்
இறுக்கி அதனைக் கொன்றிடுவான்
இறந்துவிட்டது என்றேனே!
இனிதே பறக்க விட்டானே!


- பல்லவன், காஞ்சிபுரம்.







ஏமாற்றம்
கதை : வேணுவாரியத்
படம் : சந்திரவீ
புனித யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பினார் துறவி ஒருவர்.
என் உடலும் மனமும் மிகவும் சோர்வுற்றுள்ளன. அதனால் கோயிலுக்குள் செல்லாமல் இங்கிருந்தே வழிபடுகிறேன்.
கடவுளே...
அந்த வழியாகத் திருடன் ஒருவன் வந்தான்.
யார் இது? நல்ல அதிர்ஷ்டம். நம் வேலையைக் காட்ட வேண்டியதுதான்.
சே! யாரோ ஏற்கெனவே எல்லாவற்றையும் அபகரித்துவிட்டுக் கீழே தள்ளிவிட்டார்கள் போலிருக்கு.

wise owl-1



காவலா
களிடம்
மாட்டிக்
கொள்வேன்.
இங்கிருந்து
உடனே
கிளம்
பணும்.
மரத்தில் அமர்ந்தபடி ஆந்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.
சிறிது நேரத்தில் குடிகாரன் ஒருவன் வந்தான்.
ஹா... ஹா...
ஹா...இந்த ஆள்
குடிச்சிட்டுக்
கீழே விழுந்து
கிடக்கார்.
நான் எப்படி கீழே
விழாமல்
சமாளிக்கிறேன்னு
என்னிடமிருந்து இவர்
பாடம் கற்றுக்கணும்.
அந்த வழியே விவசாயி ஒருவர் வந்து சேர்ந்தார்.
ஐயோ பாவம்!
ஏன் இவர்
இப்படி
படுத்திருக்
கிறார்?

wise owl-2





Sai Features Aluva, Kerala-683 107



wise owl-3



திரைப்படங்களிலும், தொலைக்காட்சிகளிலும் தோன்றிய கார்ட்டூன் உயிர்ச் சித்திரம் ஒன்று கோடிக்கணக்கான சிறுவர்கள், பெரியவர்கள் ஆகியோரின் உள்ளங்களை கொள்ளை கொண்டு குதூகலமூட்டியது என்று சொன்னால் அந்தப் பெருமை மிக்கி மௌஸ் சுண்டெலிக்குத்தான் உண்டு. மிக்கியை உருவாக்கிய வால்ட் எலியாஸ் டிஸ்னி, கனவிலும் கூட, தான் உருவாக்கும் மிக்கி கேரக்டர் சூப்பர் ஹிட்டாகும் என்று நினைத்திருக்க மாட்டார். டிஸ்னியின் 'ஸ்டீம் போட் லில்லி' படம் வந்தவுடன் மிக்கியின் புகழ் உலகமெங்கும் ஒரு சில நாட்களில் பரவி விட்டது. இதை ஒரு நல்ல வாய்ப்பாக எடுத்துக் கொண்டு வியாபாரிகளும் களத்தில் குதித்து விட்டார்கள். மிக்கி தொப்பி, நாள் ஒன்றுக்கு 24000 விற்றன. பற்பசை டப்பாவிலிருந்து, எதையெடுத்தாலும் அதில் மேலட்டையில் மிக்கியின் படங்களைப் போட்டால் விற்பனை பிய்த்துக் கொண்டு போயிற்று. தென் ஆப்பிரிக்காவில் மிக்கி படம் போடாமல் விற்பனைக்கு வந்த கேக்குகள் தேங்கிப் போய்விட்டன.




• டிஸ்னி

பாலருக்குப் பாதை காட்டியவர்

கார்ட்டூன் உலகைக் கலக்கிய டிஸ்னி!



அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வெள்ளை மாளிகையில் 'ஸ்டீம் போட் லில்லி' படத்தை அடிக்கடி போட்டுப் பார்த்து ரசிப்பாராம். இத்தனைக்கும் அந்தப் படம் ஏழெட்டு நிமிடமே ஓடக் கூடிய துண்டுப் படம்தான்.



• டிஸ்னி வேல்ட்

ஆனால் என்ன சிறப்பென்றால், அது தயாரிக்கப்பட்ட காலம் மௌன சினிமா — 'டாக்கி'யாக மாறிய காலம். காட்சிகளுடன், ஒலியும் சேர்ந்து திரையிலிருந்து வந்தது மக்களைப் பிரமிப்பில் ஆழ்த்தியது. 'டாக்கி' படங்களைப் பார்க்க மக்கள் திரண்டு தியேட்டர்களுக்குச் சென்றார்கள். அந்தச் சமயத்தில் வால்ட் டிஸ்னியும், 'ஸ்டீம் போட் வில்லி' படத்தை டாக்கியாக வெளியிட்டார். அதில் மிக்கிக்குக் குரல் கொடுத்தவர் டிஸ்னிதான். அதன் பின் கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் திரைப்பட, தொலைக்காட்சித் தொடர்களை ஆக்ரமித்த மிக்கிக்குத் தொடர்ந்து குரல் கொடுத்தார் டிஸ்னி.

1955ல் அமெரிக்க ஏ.பி.சி. தொலைக்காட்சியில் வாரம் ஒரு முறை மிக்கி மௌஸ் கிளப் என்ற நிகழ்ச்சியை நடத்தினார் டிஸ்னி. அந்த நிகழ்ச்சி நடக்கும் ஒரு மணி நேரமும் சாலைகளில் போக்கு வரத்தே குறைந்து போய் விடுமாம். பத்திரிகைகளையும் மிக்கி ஜுரம் விட்டு வைக்கவில்லை. மிக்கி கார்ட்டூன் தொடர் போட்ட பத்திரிகைகளின் விற்பனை ஜிவ்வென்று ஏறியது. ஆனால் இதே மிக்கி, டிஸ்னி முதலில் தயாரித்த 'பிளேன் கிரேஸி' என்ற படத்திலும் தலைகாட்டியிருக்கிறார். ஆனால் 'ஸ்டீம் போட் வில்லி'தான் மிக்கியை உச்சத்துக்குக் கொண்டு போய் விட்டது.

மிக்கி எது வேண்டுமானாலும் செய்யும். அதைச் சுண்டெலி என்று சொல்ல முடியாது. வானத்தை வில்லாக வளைக்கும்; கடலைக் குடிக்கும், விமானத்தை ஒரு கையால் ஓட்டும், பெப்ஸி பாட்டிலுக்குள் புகுந்து வெளி வரும். எதையும் செய்யும் சூப்பர் ஸ்டார் அது. டிஸ்னி, ஆஸ்வால்ட் என்ற அணிலையும், டொனால்ட் என்ற வாத்தையும், புளூட்டோ என்ற நாய்க் குட்டியையும் தனது கார்ட்டூன் துண்டுப் படங்களில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். ஆனால் இவை எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டுப் பந்தயத்தில் முதலாவதாக வந்துவிட்டார் மிக்கி.

மிக்கி சுண்டெலியை கார்ட்டூனாக வடிவமைத்த டிஸ்னி, ஏழு வயதிலேயே தமது ஓவிய ஆற்றலை நிரூபித்தவர். டிஸ்னி பிறந்தது சிகாகோ நகரத்தில் என்றாலும், வளர்ந்தது மிஸ்ஸோரி மாநிலத்தில் உள்ள மார்க்சிலைன் மற்றும் கான்ஸாஸ் நகரங்களில்தான். அங்கு ஓவியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார். கார்ட்டூன் படங்களை வரைவதில் தனி கவனத்தைச் செலுத்தினார்.

பல்வேறு மிருகங்களை வண்ணங்களில் தனித்தனியாக கார்ட்டூனாக வரைந்து, வீடு வீடாகச் சென்று விற்பனையும் செய்தார். அந்த கார்ட்டூன் படங்கள் சிறுவர், சிறுமியரிடம் பலத்த வரவேற்பைப் பெற்றன. கார்ட்டூன் படங்களைப் பார்த்து குதூகலமாகும் சிறுவர்கள், கார்ட்டூன் திரைப்படங்களைப் பார்த்தால் இன்னமும்,

மகிழ்ச்சியடைவார்கள் என்று அதற்கான முயற்சிகளில் இறங்கினார். ஆனால் திரைப்பட நகரமான கலிஃபோர்னியாவில் உள்ள ஹாலிவுட் நகரத்துக்குச் சென்றால்தான் திரைப் படத் துறையில் ஏதேனும் சாதனை செய்ய முடியும் என்று அவருக்குப் புரிந்தது. எனவே, பணம் சேர்க்கும் முயற்சியில் இறங்கினார்.

கார்ட்டூன் படங்களை வரைந்து விற்றது தவிர, மக்களைப் புகைப்படம் எடுத்தும் சம் பாதித்தார். இருந்தும் பெரிய அளவில் பணம் சேர்க்க முடியவில்லை. ஆனாலும் பையில் எண்பது டாலருடன் ஹாலிவுட்டுக்கு கிளம்பி னார். அங்கு அவர் சகோதரர் ராய் டிஸ்னி இருந்ததால் தங்குவதற்குப் பிரச்னையில்லை. சகோதாரிடம் தனது திட்டத்தைச் சொன்னார். டிஸ்னியை ஊக்குவிக்கும் விதமாக அவரும் டாலர்களைப் பங்காகப் போட்டார். கூடுதலாக 500 டாலர் கடனாகப் பெற்றார்கள். டிஸ்னி சகோதரர்களின் மாமா வீட்டில் இருந்த கார் ஷெட் ஸ்டுடியோவாக உருவானது. அங்கு கேமரா பொருத்தப்பட்டது. கார்ட்டூன் படங்கள் தயாரிப்பது அந்தக் கால கட்டத்தில் மிகச் சிரம மான காரியம். திரையில் ஓடும் ஒவ்வொரு ஃப்ரேமையும் தனித் தனியாகப் படங்கள் வரைந்து கேமராவில் படம் பிடித்து சலனப் படமாக உருவாக்க வேண்டும். எனவேதான் தொழில் நுட்பம் முன்னேறாத துவக்க நாட்களில் ஐந்து, ஆறு நிமிடங்கள் ஓடக் கூடிய துண்டுப் படங்களை மட்டுமே அவரால் எடுக்க முடிந்தது.

டிஸ்னிக்கு முதல் ஆர்டர் நியூயார்க் நகரத்திலிருந்து கிடைத் தது. 'ஆலிஸ் காமிடிஸ்' என்ற துண்டு கார்ட்டூன் படம் தயாரா யிற்று. அதன் பிறகு தொடர்ந்து நிறைய படங்களை எடுத்தார். வளரும் தொழில் நுட்பத்தைத் தனது கார்ட்டூன் படங்களில் கண்டிப்பாக நுழைத்து விடுவார் டிஸ்னி. உதார ணமாகச் சொல்வதென்றால், கார்ட்டூன் படங்களை டெக்னிக் கலரில் முதலில் தயாரித்தவர் அவர்தான். டிஸ்னி தயாரித்த முதல் முழு நீள கார்ட்டூன் படம் Snow White and the seven dwarfs. இந்தப் படம் 83 நிமிடங்கள் ஓடியது.

அதன் பிறகு டிஸ்னி தயாரித்த ஃபாண் டாஸியா, அதிசய உலகில் ஆலிஸ், ஆகிய படங்கள் 'ஓஹோ'வென்று ஓடின. கார்ட்டூன் சித்திரங்களோடு உயிருள்ள மனிதர்களும் இணைந்து நடிக்கும் படங்களையும் எடுத்தவர் அவர்தான். எண்பது டாலருடன் ஹாலிவுட் வந்த டிஸ்னி திரைத் துறையில் நன்றாகவே கால் ஊன்றி விட்டார்.

குழந்தைகளை மகிழ்விப்பதும், அவர் களைப் பிரமிக்க வைப்பதும் டிஸ்னியின் வாழ்க்கை லட்சியமாக இருந்தது. திரைப் படங்களில் மட்டுமின்றி நேரடியாகவும் அது போன்று அனுபவிக்கும் சூழ்நிலைகளை உண்டாக்கினால் என்ன, என்று யோசிக்கத் துவங்கினார். டிஸ்னி உலகத்துக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. திறந்த முதல் வாரத்திலேயே பத்து லட்சம் பேர் டிஸ்னி உலகத்தைக் கண்டு களித்தார்கள்.

1966ல் டிஸ்னி இறந்தாலும், அவர் உரு வாக்கிய டிஸ்னி அதிசய உலகம் இன்றும் இலட்சக்கணக்கான மக்களைக் கவருகிறது. டிஸ்னி உருவாக்கிய மிக்கி, டொனால்ட் ஆகிய உயிர்ச் சித்திரங்கள் என்றும் மக்கள் மனத்தை விட்டு அகலாது; கூடவே அவர் நினைவும்!

— ப்ரியன்





செய்தித் துளிகள்!

தண்ணீர் தரம்

தண்ணீர் தரம் குறித்து 122 நாடுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தர வரிசையில் இந்தியா 120வது இடத்தில் இருக்கிறது. உலக அளவில் நீர் ஆதாரங்கள் தொடர்பாக ஐ.நா. நடத்திய ஆய்வில் இத் தகவல் வெளியாகியுள்ளது. தனி நபருக்குக் கிடைக்கும் குறைந்த பட்ச தண்ணீர் குறித்து 180 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வில் இந்தியா 133வது இடத்தில் உள்ளது. தண்ணீர் தர வரிசையில் பின்லாந்து முதலிடத்தை வகிக்கிறது.

மிகப் பெரிய பணக்காரர்

உலகின் மிகப் பெரிய பணக்காரர்கள் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் பில்கேட்ஸ். தொடர்ந்து ஒன்பது ஆண்டுகளாக பில்கேட்ஸ் முதல் இடத்தில் இருக்கிறார். இந்தியாவைச் சேர்ந்த சாப்ட்வேர் தொழில் அதிபர்கள் மொகல் ஆஸிம் பிரேம்ஜி, அம்பானி சகோதரர்கள், குமாரமங்கலம், பிர்லா உட்பட ஏழு பேர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறனர்.

பூனைக்கு அறுவை சிகிச்சை

செல்லப் பிராணிகளை அதிகம் நேசிப்பவர்கள் பிரிட்டிஷ் மக்கள். சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்ட செல்லப் பூனைகளுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய ஆர்வமாக இருக்கிறார்கள். இதற்காக அமெரிக்காவில் செய்து பார்க்கப் பட்ட அறுவை சிகிச்சை வெற்றிகர மாக முடிந்தது. இந்தச் சிகிச்சையால் கூடுதலாக பூனை அதிகபட்சம் இரு ஆண்டுகள்தான் வாழ முடியும். அதிலும் பெரும்பாலான நாட்கள் மருந்து கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

ரத்தின ஜோதி மரம்

ரயில் பாதைகளின் இருமருங்கிலும் ரத்தின ஜோதி மரம் நடப்படும் என ரயில்வே அமைச்சர் நிதீஷ் குமார் கூறியுள்ளார். இந்த மரத்திலிருந்து எடுக்கப் படும் எண்ணெய்யை டீசலுடன் கலந்து ரயில் எஞ்ஜின்களில் பயன்படுத்த திட்டம் உள்ளது. இந்த மரம் சுற்றுச் சூழலுக்கும் சிறந்த நண்பனாக விளங்குகிறது.

தேர்தல் முடிவுகள்

இமாசல பிரதேசம், மேகாலயா, திரிபுரா, நாகாலாந்தில் சட்டசபைத் தேர்தல்கள் நடந்து முடிந்தன. இதில் இமாசல பிரதேசம், மேகாலயாவில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. திரிபுராவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வென்றது. நாகாலாந்தில் யாருக்கும் அதிகப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.



எப்படி என் சமர்த்து?

கிராமத்திலிருந்து அருணகிரியைக் கூட்டி வந்திருந்தார் சடாட்சரம். அருணகிரி அரை சமர்த்து. கூடவே ஞாபக மறதியும் சேர்ந்து கொண்டது.

காய்கறிக் கடைக்கு அனுப்பினால் சொன்ன காயை மட்டுமே வாங்கி வருவான். "அவரைக்காய் கிலோ 12 ரூபாய் சொன்னான். ஆனா கத்திரிக்காய் கிலோ ஆறு ரூபாய்தான்" என்பான்.

"அதையும் ஒருகிலோ வாங்கி வர வேண்டியதுதானே?" என்று அலுத்துக் கொள்வாள் சடாட்சரத்தின் மனைவி அகிலா.

"நீங்க சொல்லலியே" என்பான்.

"இதெல்லாமா சொல்லுவாங்க! போகட்டும். கொசுறு கறிவேப்பிலை, கொத்துமல்லி கேட்கலையா?" என்பார் சாட்சரம்.

"அவரைக்காய் விற்கிறவன்கிட்டே கறிவேப்பிலை, கொத்துமல்லி இல்லே! அடுத்த கடைக்காரன்கிட்டே நிறைய இருந்தது. பிசுநாரி! கேட்டதுக்குத் திட்டிட்டான்" என்பான் பரிதாபமாக!

ஒரு நாள் அகிலாவுக்குக் காய்ச்சல். அருணகிரியின் துணையோடு மருத்துவமனை சென்றாள். டாக்டர் ஊசிபோட்டு மருந்து கொடுத்தார். வீட்டுக்கு வந்ததும் அருணகிரி சின்ன பாட்டில்களாக இரண்டைக் காண்பித்து "எப்படி என் சாமர்த்தியம்!" என்றான். அகிலா திகைத்தாள்.

"ஏதுடா? டாக்டர் மேஜையிலேயிருந்து திருடினியா?" என்று கேட்டாள்.

"இது எப்படி திருட்டாகும்? ஐம்பது ரூபாய் கொடுத்து ஊசி போட்டுட்டிருக்கிறீங்க! கேட்டா கொடுக்க மாட்டார். அன்னிக்குக் கீரைக்காரிகிட்டே நீங்க பச்சை மிளகாய் எடுக்கலே? அது மாதிரி இதுவும் கொசுறா எடுத்ததுதான்" என்று விளக்கம் சொன்னான் அருணகிரி.

எல்லோருமாக க்ஷேத்ராடனம் புறப்பட்டார்கள். சினையான பசுமாட்டை மாமா வீட்டில் விட்டுச் சென்றார்கள். திரும்பிவர மூன்று



அப்புறம் அகிலாவின் பெற்றோர், ''அகிலா கொடுத்தா, நாங்கதான் எங்களாலே வளர்க்க முடியாதுன்னு சொல்லி திருப்பிக் கொடுத்துட்டோம்'' என்று சமாதானம் சொன்னார்கள்.

நாட்கள் சென்றன. ஒரு நாள் – "நினைச்சு சுமக்கிற புத்தி! ஒரே தடவையாய் சாமான்களைக் குறிச்சுக் கொண்டு வாங்கிட்டு வராம எண்ணெய்க்கு ஒரு தடவை, சர்க்கரைக்கு ஒருதடவை, ரவைக்கு ஒரு தடவைன்னு மூணு தடவையா கடைக்கு அலைவே? ஒவ்வொருத்தன் அஷ்டாவதானமே பண்றான்! சமர்த்தே இல்லே'' என்று அலுத்துக் கொண்டார் சடாட்சரம்.

மாதமானது. மாடு ஆண் கன்று போட்டிருந்தது. மாமா பராமரிப்புக்கென்று பணம் வாங்க மறுத்ததால் கன்றுக் குட்டியை மாமாவுக்கே கொடுத்துவிட்டார் சடாட்சரம். மாமாவிடம் இரட்டை மாட்டு வண்டி இருந்தது.

அகிலா பிரசவத்துக்குப் பிறந்த வீடு சென்றாள். ஆண் குழந்தை பிறந்தது. ஆறு மாதம் கழித்து ஊருக்குப் புறப்படுகையில் அருணகிரி,

''அம்மா! உங்களுக்கு நன்றியே இல்லே! மூணு மாசம் தீனி வைச்சு கவனிச்சுக்கிட்டதுக்கே ஐயா கன்னுக் குட்டியைத் தானமா கொடுத்தாங்க. உங்களை ஆறுமாசம் கவனிச்சிருக்காங்க பெரியம்மா. குழந்தையை அவங்களுக்குக் கொடுக்கறதுதான் நியாயம்'' என்று சொன்னதும் அவனுக்கு எப்படி புரிய வைக்கிறதென்று தெரியாமல் அகிலா விழித்தாள்!

மறு நாள் சடாட்சரம் மாடிப்படியில் கால் தவறி உருண்டார். தலையில் நல்ல அடி. இரத்தம் வந்தது. உடனே போய் குடும்ப டாக்டரை அழைத்துவர அருணகிரியை அனுப்பினாள் அகிலா.

மருத்துவர் வந்து கட்டுப் போட்டு மருந்து கொடுத்தார். ஆனால் அருணகிரி ஏன் வீடு திரும்பவில்லை என்று தெரியாமல் தம்பதிகள் குழம்பினர்.

இருட்டியபிறகு அருணகிரி ஒரு சிறு கும்பலோடு வந்தான். "இவர்களெல்லாம் யார்?" என்று சடாட்சரம் கேட்க, "இவர் வக்கீல். உயில் எழுத வந்திருக்கிறார். உங்களுக்கு அடிபட்டதால் மோசமான நிலைக்குப் போய் விட்டால் என்ன செய்வதென்று இருந்து அழைத்து வந்தேன். அதுதான் கொஞ்சம் நேரமாகிவிட்டது! சாஸ்திரிகள் கிடைக்காமல் திண்டாடக் கூடாதே! நாளைக்கு முகூர்த்த நாளாச்சே! அதனாலே அவரையும் கூட்டிட்டு வந்துட்டேன். எப்படி என் சமர்த்து?" என்று அருணகிரி கேட்க, சடாட்சரம் மயக்கமானார்!

இடமிருந்து வலம்

1. பாட்டுக்கு ஒரு புலவர் (5)

3. பணம் கையாளும் இடம் (3)

5. உறுதி (3)

7. சுரம், சிரம் _____ நீட்டக் கூடாது (3)

8. பூனையின் குழந்தை (3)

10. பாருங்கள் (3)

11. _____ தொற்றால் நோய்கள் பரவுகின்றன (3)

வலமிருந்து இடம்

13. ஆற்றங்கரைகளில் _____ வளர்ந்தது (5)

மேலிருந்து கீழ்

1. பரமசிவனின் மனைவி (4)

2. நாடு சுதந்திரம் அடைய பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவியைத் _____ செய்துள்ளனர் (4)

3. எல்லை (4)

4. பட்டணத்திற்கு எதிர்ப்பதம் (4)

9. மின்சார மற்றும் தொலைபேசி இணைப்புகளைத் தாங்கி நிற்பது _____ (4)

10. திருதராஷ்ட்ரனின் மனைவி (4)

கீழிருந்து மேல்

6. விளக்குகளில் ஒன்று (4)

11. உருளை, சேனை என்பன இந்த வகையைச் சேர்ந்தவை (4)


12. வெளியே கூடவே வரும் நண்பனுக்கு வீட்டுக்குள் அனுமதி இல்லை (4)

13. திரிலோக சஞ்சாரி (4)

- உ. சங்கரலிங்கம்,
ஒன்பதாம் வகுப்பு,
புனித சூசையப்பர்
மேல்நிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்.

குறுக்கெழுத்துப் புதிர்

விடை 58 ஆம் பக்கம்






சொத்து

தொழில் மேதை ஹென்றி ஃபோர்டை ஓர் இளைஞர் பார்த்து, "உங்களிடம் இவ்வளவு செல்வம் இருக்கிறதே? என்னிடம் என்ன இருக்கிறது என்று கவலைப்படுகிறேன்" என்றார். அதற்கு ஃபோர்டு, "உன்னுடைய இளமையை மட்டும் எனக்குக் கொடுக்க முடியுமானால் என்னுடைய கோடிக்கணக்கான சொத்துகளை உனக்கே கொடுத்து விடுவேன். இந்த இளமை எனக்குக் கிடைத்தால் அதை வைத்து இதைப் போல பல மடங்கு அதிகப் பொருளை என்னால் சம்பாதிக்க முடியும்" என்றார்.



• ஹென்றி ஃபோர்ட்



• ஆறுமுக நாவலர்

நகைச்சுவை

பெர்னார்ட் ஷாவிற்கு ஷேக்ஸ்பியரைக் கண்டால் பிடிக்காது. எனவே அவரைப் பழிவாங்க நினைத்த ஷேக்ஸ்பியரின் அபிமானிகள் ஒரு கூட்டத்திற்கு ஷாவை அழைத்திருந்தனர்.

ஷா பேசும்போது சில ஜோக்குகளைச் சொன்னார். ஆனால் ஷேக்ஸ்பியர் அபிமானிகள் யாருமே சிரிக்கவில்லை. பழிவாங்கிவிட்டதாக நினைத்தனர்.

கூட்டத்தில் ஒருவர் எழுந்து, "ஷா அவர்கள் நகைச்சுவை என்று எதையோ சொன்னார். நமக்குத்தான் சிரிப்பு வரவில்லை" என்றார்.

உடனே ஷா எழுந்து, "எப்படி சிரிப்பு வரும்? அவை ஷேக்ஸ்பியர் சொன்னவை ஆயிற்றே!" என்றார். ஷேக்ஸ்பியரின் அபிமானிகள் தலைகுனிந்தனர்.

— எம். ஜரினா பானு, லெட்சுமாங்குடி



• ரவிவர்மா

மண்

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது சிறையில் இருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ரொட்டியில் மண் கலந்திருந்தது. இதைக் கண்ட நேரு, "மண் இல்லாத ரொட்டிதான் வேண்டும்" என்று சிறை அதிகாரியிடம் கேட்டார்.

உடனே சிறை அதிகாரி ஏளனமாக, "இதுவும் உங்கள் தாய் மண்தானே! உங்களுக்குச் சுவையாகத்தான் இருக்கும்!" என்றார்.

உடனே நேரு, "நாங்கள் போராடுவது எங்கள் மண்ணை மீட்பதற்குத்தான். தின்பதற்கு அல்ல!" என்று கூறினார். அதைக் கேட்ட சிறை அதிகாரி வாயடைத்துப் போனார்.

— எம். வினோத்,
சங்கரன்கோவில்

தூரிகையை வணங்கியது ஏன்?

அழைப்பு...

ஓவியர் ரவிவர்மாவிற்கு கவர்னரிடமிருந்து ஒரு விழாவில் கலந்து கொள்வதற்கு அழைப்பு வந்தது. அவர்

விழாவிற்குச் செல்வதற்காகன ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால் கடைசி நேரத்தில் அவரது குதிரை வண்டிக்காரர் நோய்வாய்ப்பட்டார். ரவிவர்மா அவரை வண்டியில் ஏற்றி தன் குடும்ப டாக்டரிடம் அழைத்துச் சென்றார். அதன் காரணமாக ரவிவர்மாவால் அன்றைய தினம் விழாவிற்குச் செல்ல முடியவில்லை.

நான்கு நாட்களுக்குப் பிறகு கவர்னரின் செயலாளரிடமிருந்து மீண்டும் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவர், 'உங்களுக்கு கவர்னர் விழாவை விட வண்டிக்காரரின் நோய்தான் முக்கியமாகப்பட்டதா?' என்று கேட்டிருந்தார். அதற்கு ரவிவர்மா 'ஆமாம்' என்று ஒரே வார்த்தையில் பதில் எழுதினார்.

– நெ. இராமன்,
சென்னை.

மதிப்பு

இராமலிங்க சுவாமிகள் பாடல்கள் அச்சிடப்பட்டு 'அருட்பா' என்ற பெயரால் வெளியிடப்பட்டபோது நீதி மன்றத்தில் அது தவறு என்று வழக்குத் தொடரப்பட்டது. யாழ்ப்பாணத்துப் பெரும் புலவர் ஆறுமுக நாவலரும் அவரைச் சார்ந்தவர்களும் வழக்குத் தொடுத்தார்கள்.



• ஷேக்ஸ்பியர்

நாயன்மார்களின் தேவாரம், திருவாசகம் ஆகியவையே 'அருட்பா' என்னும் பெயர்க்கு உரியவை என்பது அவர்களின் வாதம். அவ்வழக்கில் ஆஜராக நீதிமன்றத்துக்குள் ராமலிங்க சுவாமிகள் நுழைந்தபோது, மற்றவர்களோடு சேர்ந்து ஆறுமுக நாவலரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினார். ''எதிரியாகிய அவரை எழுந்து நின்று வணங்கியதேன்?'' என்று சிலர் ஆறுமுக நாவலரைக் கேட்டனர். ''அவருடைய பாடல்களை அருட்பா அல்ல என்று மறுத்தேனே தவிர, நான் அவரைக் குறை கூறவில்லையே. அவர் உயர்ந்த சான்றோர். உண்மையான ஒழுக்கத்தின் திருவுருவம். அதனால் அவரை மதிக்கிறேன், போற்றுகிறேன்'' என்றார் ஆறுமுக நாவலர்.



• நேரு

- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்

பெயர்?

ஒருமுறை தாமஸ் ஆல்வா எடிசன் வரி கட்டுவதற்காகச் சென்றிருந்தார். அங்கு உள்ள அலுவலர் எடிசனிடம், ''உமது பெயர் என்ன?'' என்று கேட்டார். உடனே எடிசனால் அதற்குப் பதிலளிக்க முடியவில்லை. காரணம், தன்



• எடிசன்

பெயர் என்ன என்பது அவருக்கு நினைவே இல்லாததுதான். நல்லகாலமாக அச்சமயம் அவரது நண்பர் அங்கே வந்து சேர்ந்தார். அவர், எடிசனைக் கண்டதும், ''என்ன எடிசன், நலமாக இருக்கிறீர்களா?'' என்று விசாரித்தார். அப்போதுதான் எடிசனுக்குத் தன் பெயர் நினைவில் வந்தது. பிறகு பெயரைக் கூறி பணம் கட்டி விட்டுத் திரும்பினார் எடிசன்.

– ஏ.எஸ். பாத்திமா,
காரைக்கால்.

டாக்டர் கு. கணேசன்



இமைகள் மூடுவது ஏன்?

● **காழி. ஆர்.சீத்தாராமன், சீர்காழி**

? கோடை காலத்தில் ஏற்படும் உடல் சூட்டைத் தணிக்க என்ன செய்ய வேண்டும், டாக்டர்?

! கோடை காலத்தில் தினமும் இருவேளை குளிக்க வேண்டும். தண்ணீர் வசதி இல்லாதவர்கள் ஈரத்துணியால் உடலைத் துடைத்துக் கொள்ளலாம். அடிக்கடி தண்ணீர், இளநீர், பழச்சாறு போன்றவற்றைக் குடிக்க வேண்டும். காரம், எண்ணெய் மற்றும் மசாலா நிறைந்த உணவுகளைக் குறைத்துக் கொண்டால் நல்லது. ஆவியில் அவித்த உணவுகளை அதிகமாக உண்ண வேண்டும். உணவில் மோர் அல்லது தயிர், ஒரு பழம் கண்டிப்பாக இருக்க வேண்டும். வெள்ளரிக்காய், தர்ப்பூசணி, கொய்யாப்பழம் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிகமாக வெயிலில் அலைவதைக் குறைத்துக் கொள்ளலாம். வெயிலில் செல்லும்போது குடையுடன் செல்லவும். இல்லாவிட்டால், தலையில் தொப்பி போட்டுக் கொள்ளவும். கண்களுக்குக் கறுப்புக் கண்ணாடி அணிந்து கொள்ளலாம். கோடை காலத்தில் பருத்தித் துணிகள் ஏற்றவை. அதிக தாகம் எடுத்தால் காய்ச்சி ஆற வைத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் சர்க்கரையையும், 5 கிராம் சமையல் உப்பையும் கலந்து வைத்துக் கொண்டு அவ்வப்போது குடிக்கலாம்.

● **பா. ராமச்சந்திரன், திருச்சிராப்பள்ளி**

? பல் நன்றாக வளர்வதற்குக் கால்சியம் சத்து தேவை என்கிறார்கள். இது உண்மையா? கால்சியம் சத்து எந்த உணவுகளில் அதிகமாக உள்ளது?

! உண்மைதான். பற்கள் நல்ல வலுவுடன் வளர்வதற்கு கால்சியம், பாஸ்பரஸ் என்னும் இரண்டு தாதுச்சத்துகள் மிக அவசியம். இந்தச் சத்துகள் அதிகமாக உள்ள உணவுப் பொருள்கள் இவை : பால் மற்றும் பாலில் தயாரிக்கப்பட்ட அனைத்து உணவுகள், முட்டையின் வெள்ளைக்கரு, இறைச்சி, மீன், பேரீச்சம்பழம், உலர்ந்த திராட்சை, முந்திரிப்பழம், அத்திப்பழம், பாதாம்பருப்பு. சோயாமொச்சை, தேங்காய், பீட்ரூட், காரட், கொய்யா, தர்ப்பூசணி, முருங்கை, எள், கொத்துமல்லி, கேழ்வரகு, மிளகு மற்றும் அகத்திக்கீரை.

● வ. மலர்விழி, தஞ்சாவூர்

? எக்ஸ்-ரே படங்களில் உடல் உறுப்புகள் தெரிவது எப்படி?

! எக்ஸ்-ரே படங்களை எடுக்க எக்ஸ் கதிர்கள் பயன்படுகின்றன. இந்த எக்ஸ் கதிர்களை எக்ஸ்-ரே கருவி வெளியிடுகிறது. மின்காந்த அலைகளைச் சேர்ந்த எக்ஸ் கதிர்களுக்கு உடலை ஊடுருவிச் செல்லும் திறன் உண்டு. அவ்வாறு ஊடுருவிச் செல்லும்போது உடலின் ஒவ்வொரு பகுதியும் அதன் தன்மைக்கு ஏற்ப சிறிதளவு கதிர்களைக் கிரகித்துக் கொள்கின்றன. இப்படி கிரகித்த பகுதிகள் எக்ஸ்-ரே படங்களில் கறுப்பும் வெள்ளையுமாகத் தெரியும். எடுத்துக்காட்டாக, எலும்புகள் எக்ஸ் கதிர்களை மிக அதிக அளவில் கிரகித்துக் கொள்ளும். இதனால் அந்தப் பாகங்கள் எக்ஸ்-ரே படத்தில் வெள்ளை நிறத்தில் துல்லியமாகத் தெரியும். அதே நேரத்தில், காற்று நிறைந்த நுரையீரல், குடல் போன்ற உறுப்புகள் மிக மிகக் குறைந்த அளவில் எக்ஸ் கதிர்களைக் கிரகிப்பதால் அவை எக்ஸ்-ரே படங்களில் கறுப்பு நிறத்தில் தெரியும். உடல் உறுப்பின் தசை அடர்த்தி, அதன் தன்மை, அதனுள் இருக்கும் காற்று மற்றும் கொழுப்பு ஆகியவற்றைப் பொறுத்து எக்ஸ் கதிர்கள் கிரகிக்கப்படுவதால் உறுப்புகள் ஒவ்வொன்றையும் வேறுபடுத்திப் பார்க்க எக்ஸ்-ரே படங்கள் உதவுகின்றன.

● ஏ. சீனிவாசன், கும்பகோணம்

? நாம் உறங்கும்போது கண் இமைகள் மூடிக் கொள்வது ஏன்?

! இமைகள் இரண்டும் விழிக் கோளத்தின் வெளிக் கதவுகள் என்றால் அது மிகையில்லை. கண்ணின் வெளிப்புறத்திலிருந்து வரும் ஆபத்துகளை இவை தவிர்க்கின்றன. கண்களை உலரவிடாமல் பார்த்துக் கொள்கின்றன. உறங்கும்போது கண் இமைகள் மூடிக் கொள்வது என்பது கண்களைப் பாதுகாப்பதற்கு இயற்கையே அமைத்துக் கொடுத்துள்ள ஓர் அனிச்சைச் செயல். எப்படி நம் வீட்டின் வெளிக்கதவுகளைப் பூட்டாமல் இரவில் உறங்கினால் பொருள்கள் திருட்டுப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ அதைப் போல, நாம் உறங்கும்போது கண் இமைகள் திறந்திருந்தால் கண்ணீர் காய்ந்து கண்கள் உலர்ந்து போகும். கண்களில் தூசு விழும்; பூச்சி விழும்; எறும்பு கடிக்கும்; ஈ மொய்க்கும்; காயம் ஏற்படலாம். இவை காரணமாகக் கண்களுக்குக் கெடுதல் வரலாம். இதனைத் தவிர்க்கவே தூக்கத்தில் தானாகவே கண் இமைகள் மூடிக் கொள்கின்றன.

புதிர் இங்கே! பதில் கீழே!

1. மீனில் உள்ள வைட்டமின் எது?

அ) வைட்டமின் ஏ, ஆ) வைட்டமின் பி, இ) வைட்டமின் சி

2. பிறந்த குழந்தையின் உடலில் எத்தனை எலும்புகள் இருக்கும்?

அ) 206 ஆ) 263 இ) 300க்கு மேல்

3. காரட் சிவப்பு நிறத்தில் இருப்பதற்குக் காரணமான வேதிப் பொருள் எது?

அ) வைட்டமின் ஏ ஆ) பீட்டா கரோட்டின் இ) அமினோ அமிலம்

4. குளோனிங் என்பதன் பொருள் என்ன?

அ)உயிர் உருவாதல் ஆ)குழந்தை பிறத்தல் இ) நகல் எடுத்தல்

5. மனித எலும்புகளின் அமைப்பை விளக்கியவர் யார்?

அ)லூயி பாஸ்டர் ஆ) கிளாப்டன் ஹாவர்ஸ் இ)வில்லியம் ஹார்வி

விடைகள் : 1. அ, 2. இ, 3. அ, 4. இ, 5. அ





3. பச்சைக் கோட்டைக்குள் பளிங்கு வண்ண மாளிகை மாளிகையின் உள்ளே மகத்தான தெப்பக்குளம் - அது என்ன?

4. வீட்டுக்குள்ளே ஆடுவான் பாடுவான்; விரலசைத்தால் கண்ணை மூடுவான் - அவன் யார்?

- ஆர். ஏ. ஜெயந்த் பாலாஜி,
ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ சக்தி மெட்ரிக் பள்ளி,
செட்டிபாளையம்.

சொல்லுங்கள் விடை என்ன?

I

பூமியில் வளர்ந்த மரம்; கிளைகள் உண்டு, இலைகள் இல்லை - அது என்ன?

2. பூட்டு, சாவி இல்லாத பெட்டி; காசு கொடுத்து வாங்கும் பெட்டி - அது என்ன?

3. போனால் திரும்பி வராது - அது என்ன?

4. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம் - அது என்ன?

5. ஆயிரம் நூல் பின்னலில் அழகான பலகாரம் - அது என்ன?

6. தண்ணீர் இல்லாமல் வளரும், தரையில்லாமல் படரும் - அது என்ன?

7. தச்சன் செய்யாத பெட்டி, தானே திறந்து மூடும் பெட்டி - அது என்ன?

- வெ. இராதாகிருஷ்ணன், தஞ்சாவூர்

II

1. பித்தளைக் கிணற்றில் ஐந்து தலைப் பாம்பு, படமெடுத்து ஆடுகிறது - அது என்ன?

2. வெட்ட வெளியில் வெள்ளைக் குடை விரிந்து நிற்கிறது - அது என்ன?

3. சின்ன வீட்டில் நூறு குள்ள மனிதர்கள் - அது என்ன?

- துரை. முருகேசன், காரமடை.

III

1. மூன்று காலால் ஓடும்; முன்னால் ஒரு கண் இருக்கும். தாண்டிக் குதித்து ஓடும்; தடதடவென சத்தமிடும் - அது என்ன?

2. கையிரண்டு இருக்கும்; கால் நான்கு இருக்கும்; தலை மட்டும் இருக்காது! எல்லார் வீட்டிலும் தவறாது இருக்கும் - அது என்ன?

IV

1. குட்டை மரத்தில் கொட்டாப் புளி - அது என்ன?

2. ஆடி ஓய்ந்ததும் அம்மணி வருவாள் - அவள் யார்?

3. நடுக் காட்டுக்குள்ளே ஒரு சொட்டு இரத்தம்- அது என்ன?

4. பாறையின் மேல் கோரை, கோரைக்குள்ளே மனிதர்கள் - அவர்கள் யார்?

- எஸ். சபீதா, ஏழாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

V

1. வெள்ளைக் குதிரைக்குப் பச்சை வால் - அது என்ன?

2. ராத்திரி பூத்த ரகசியப் பூ, காலையில் பார்த்தால் காணோம் - அது என்ன?

3. ராத்திரி மழைக்குக் காலையில் சிவப்புக் கம்பளம் - அது என்ன?

4. நீரிலே பூத்த பூ, தலையிலே சூடாத பூ - அது என்ன?

- பி. வீரமணி, ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல் நிலைப்பள்ளி, நல்லூர்.

விடைகள்

I. 1. மான், 2. தீப்பெட்டி, 3. வருடம், 4. வளையல், 5. இடியாப்பம், 6. தலைமுடி, 7. இமை

II. 1. குத்து விளக்கு, 2. காளான், 3. தீப்பெட்டி-தீக்குச்சிகள்


III. 1. ஆட்டோ ரிக்ஷா, 2. நாற்காலி, 3. இளநீர், 4. டீவி

IV. 1. சுத்தரிக்காய், 2. ஆவணி, 3. குன்றிமணி, 4. பேன்கள்

V 1. முள்ளங்கி, 2. நட்சத்திரம், 3. பட்டுப்பூச்சி, 4. உப்பு.


திண்டுக்கல்
ஸ்பெஷல்


திண்டுக்கல் ஸ்பெஷல்



"சார்! ஒரு அகராதியோட விலை எவ்வளவு?"
"100 ரூபாய்."
"கொஞ்சம் குறைச்சு சொல்லக்கூடாதா?"
"லொள்! லொள்! 100 ரூபாய்."

- ச. அழகுவேல், க. தருமத்துப்பட்டி

பிரிவு



மழையைத் தேடி சாரல் வந்தது
வானம் தேடி மேகம் வந்தது
கனியைத் தேடி சுவை வந்தது
பூக்களைத் தேடி வண்டு வந்தது.
இயற்கை தேடி அழகு வந்தது.
இசையைத் தேடி கீதம் வந்தது.
இரவைத் தேடி நிலவு வந்தது.
பகலைத் தேடி சூரியன் வந்தது.
மண்ணைத் தேடி மழை வந்தது
உன்னைத் தேடி நான் வந்தேன்
என்னைத் தேடி நீ வந்தாய். ஆனால்
தோழி நம்மைத் தேடி பிரிவு வந்தது.


- எம். ஷபீரா பேகம்,
நாகல் நகர், திண்டுக்கல்.

எதுவானால் என்ன?



திசைகள் எதுவானால் என்ன?
காற்று வந்தால் ஏற்றுக் கொள்
மலர்கள் எதுவானால் என்ன?
மணம் இருந்தால் சூடிக் கொள்
மண் எதுவானால் என்ன?
தண்ணீர் சுரந்தால் பருகிக் கொள்
நெருப்பு எதுவானால் என்ன?
சுடாது அமர்ந்து குளிர் காய்ந்துகொள்
மதங்கள் எதுவானால் என்ன?
மனித நேயம் கண்டால் தழுவிக் கொள்.


- கே. நாகரத்தினம்,
திண்டுக்கல்- 3.



குறிஞ்சி மலர்ச் சிறப்பினையொட்டியே மலைப் பகுதிக்குக் குறிஞ்சி நிலம் எனப் பெயர் அமைந்தது. எனினும் எல்லா மலைகளிலும் குறிஞ்சி வளர்வதில்லை. மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களிலும் நீல மலையின் அடிவாரத்தில் மிகச் சில இடங்களிலுமே குறிஞ்சி மலர் காணப்படுகிறது. அழகிய மணமுள்ள நீல நிறமுள்ள குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் இயல்பு கொண்டது. கொடைக்கானல் மலை குறிஞ்சிக்குப் பெயர் பெற்றது. இது 'குறிஞ்சி மலை' என்றே பெயர் எய்திவிட்டது. இம் மலையில் குறிஞ்சி ஆண்டவன் கோயில் இருப்பது குறிப்பிடத்தக்கது. கூதிர்காலம் தொடங்கிப் பின் பனிக்காலம் முடிய நிரம்பப் பூக்கும் குறிஞ்சி, பின்னர் படிப்படியாகக் குறையும். எனினும் ஐந்தாறு மாதம் மலர்ச்சி நீடிக்கும்.

இறுதியாக 1993-94 ஆம் ஆண்டுகளில் குறிஞ்சி மலர்ந்தது. அடுத்து 2006 ஆம் ஆண்டில் குறிஞ்சியின் மலர்ச்சியை நாம் எதிர்ப்பார்க்கலாம்.

- நா. தண்டபாணி, அம்பல்.



திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கோயில்கள்:

தாடிக் கொம்பு: சௌந்தர ராஜ பெருமாள் கோவில்

திண்டுக்கல் : மாரியம்மன் கோவில்

கன்னிவாடி : (தெத்துப்பட்டி) ராஜகாளி அம்மன் கோவில்


அணைப்பட்டி: ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவில்

பழனி : பால தண்டாயுதபாணி கோயில்

கன்னிவாடி: சோமலிங்கசாமி கோயில்

தருமத்துப்பட்டி: சாத்தாரப்பன் கோயில்

- சு.பாரதி, ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர் நிலைப் பள்ளி, சு. தருமத்துப்பட்டி



"பச்சை மாத்திரை ஒரே கசப்பு, வெள்ளை மாத்திரை லேசான புளிப்பு, டானிக் தண்ணி மாதிரி சப்புனு இருந்துச்சு டாக்டர்"

"எதுக்கு இதெல்லாம் சொல்றீங்க?"

"நீங்கதானே இந்த மருந்து, மாத்திரையெல்லாம் சாப்பிட்டு வந்து எப்படி இருக்குன்னு சொல்லச் சொன்னீங்க!"

- இரா. செல்லச்சடையாண்டி, ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, பள்ளபட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

புத்திசாலி

நாளை என்னும் சொல்லுக்காக
நாம் காத்திருக்கலாம்.
ஆனால் நாம் இருப்போமா?
நேற்று என்னும் முடிந்து
போன காலம்
நமக்காக
வந்து
காத்திருக்காது.
எனவே இன்று
என்பதை மட்டும் கருத்தில்
கொண்டு செயல்படுபவனே புத்திசாலி!



- எஸ். சர்தார் முகமது, ஒன்பதாம் வகுப்பு, நேருஜி நினைவு நகரவை மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்



"அந்தப் பையன் அப்பா சொல்லைத் தட்டாதவன்"

"எப்படி சொல்றே?"

"அந்தப் பையனோட அப்பா, அவனைக் கோபத்துல 'புண்ணாக்கு'னு திட்டிட்டாரு. அதுக்குப் போய் அந்தப் பையன் கீழ விழுந்து உடம்பு பூராவும் புண்ணாக்கிட்டான்."

- ச. அழகுவேல், ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
க. தருமத்துப்பட்டி.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வான ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்ட ஆண்டு 1899.

- தேனி முருகேசன், தேனி.

திண்டுக்கல் மாவட்டத்தில் மிக முக்கியமான சுற்றுலாத் தலம் கொடைக்கானல். கோடை வெயிலில் இருந்து தப்பிக்க இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் நிறைய சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். ஏரியில் படகு சவாரி, அருவி, தாவரவியல் பூங்கா, மலர்க் கண்காட்சி, விசித்திரமான மலைகள் என கொடைக்கானலில் கண்டுகளிக்க நிறைய விஷயங்கள் உள்ளன. இந்தக் கோடை விடுமுறையில் அவசியம் நீங்கள் வாருங்கள்!




- பொ. மகாதேவன்,
செந்துறை, திண்டுக்கல் மாவட்டம்.

அட்டையில்: பிரஹ்லாத், ஷரண்யா,
வண்ணப்படம்: உத்ரா

பெயர்க் காரணம்?

திண்டுக்கல் ஒரு காரணப் பெயராகும். திண்டி + கல் = திண்டுக்கல். திண்டுக்கல் நகரின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் குன்றின் பெயர், திண்டி. மற்றொரு காரணப் பெயராக திண்டீஸ்வரன் என்ற மன்னன் ஆண்டதால், திண்டுக்கல் எனக் கூறுவர். திண்டுக்கல் நகரை மொத்தம் நான்கு அரசர்கள் ஆண்டிருக்கிறார்கள். இதற்குச் சான்றாக திண்டீஸ்வரன் என்னும் மன்னனும், நாயக்கர்கள் கால பெருமாள் கோவிலும் அக் கோவிலில் காணப்படும் பாண்டிய, சோழ மன்னர்களின் கால சிற்பங்களும் இன்றளவும் காணப்படுகின்றன.



திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி மலை, சிறு மலை, தாண்டிக்குடி, கொடைக்கானல் மலை, பன்றி மலை போன்றவை இருக்கின்றன. இவை மேற்குத் தொடர்ச்சி மலைகளாகும்.

பொருந்தலாறு, நங்காஞ்சி, குதிரையாறு, குடவனாறு, பாலாறு, சண்முகநதி, வராமநதி போன்றவையும் உள்ளன. அணைக்கட்டுகளாக காமராஜர் நீர் தேக்கம், ஆத்தூர் அணைப்பட்டி, வைகை அணை, நிலக்கோட்டை சண்முகநதி, பழனி சாத்தரப்பசுவாமி நீர் தேக்கம் ஆகியனவும் உள்ளன.

- க. பாரதி ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் உயிர்நிலைப் பள்ளி, க. தருமத்துப்பட்டி,
திண்டுக்கல்.



சொர்க்கத்தைப் பார்த்த கண்ணன்!

கண்ணன் தினமும் உறங்கும் முன் தன் பாட்டியிடம் கதை கேட்பான். பாட்டி அவனுக்கு நாகலோகம், சந்திரலோகம், சூரியலோகம் பற்றிய கதைகளைக் கூறுவாள். ஒரு நாள் பாட்டி சொர்க்கத்தைப் பற்றி விவரித்தாள். சொர்க்கத்தின் அழகைக் கேட்ட கண்ணன் அதைப் பார்க்க வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தான். பாட்டி மனிதர்கள் சொர்க்கத்தைப் பார்க்க முடியாதென்று அறிவுறுத்தினாள். கண்ணன் அழுது கொண்டே தூங்கிவிட்டான்.

கனவில் பளபளவென்று மின்னும் ஒரு தேவதை அவன் பக்கத்தில் நின்றது. "சொர்க்கத்தைப் பார்க்க பணம் தர வேண்டியிருக்கிறது. நீ சர்க்கஸ் பார்க்கப் பணம் கொடுப்பது போல சொர்க்கத்தைப் பார்க்கவும் பணம் கொடுக்க வேண்டும்" என்றது தேவதை.

கண்ணன் கனவிலேயே "நான் பாட்டியிடம் பணம் கேட்பேன்" என்று சொன்னான். ஆனால் தேவதை "சொர்க்கத்தில் உன்னுடைய பணம் செல்லாது. அங்கே பிறருக்கு நன்மை செய்தல் என்ற புண்ணியங்களின் பணம்தான் செல்லும். நீ இந்தப் பெட்டியை உன்னிடத்தில் வைத்துக் கொள். நீ நல்ல காரியம் ஒன்றைச் செய்தால் இதில் ஒரு ரூபாய் வரும். தீய காரியம் செய்தால் ஒரு ரூபாய் மறைந்து விடும். இப்பெட்டி எப்போது நிரம்புகிறதோ, அப்போது நீ சொர்க்கத்தைப் பார்க்க முடியும்" என்று கூறியது.

கண்ணனின் தூக்கம் கலைந்தது. பக்கத்தில் உண்மையிலேயே ஒரு பெட்டியைப் பார்த்தான். மகிழ்ந்தான். அன்று பாட்டி அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்தாள். அதை எடுத்துக் கொண்டு அவன் வீட்டிலிருந்து கிளம்பினான். ஒரு நோயாளிப் பிச்சைக்காரன் அவனிடம் பிச்சை கேட்டான். பிச்சைக்காரனுக்கு ரூபாய் கொடுக்காமலே கண்ணன் ஓடிவிட நினைத்தான். ஆனால் அதற்குள் எதிரில் அவனுடைய ஆசிரியர் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.



அவரைப் பார்த்ததும் கண்ணன் பிச்சைக்காரனுக்கு ரூபாயைத் தந்துவிட்டான். ஆசிரியர் அவன் முதுகைத் தட்டிப் பாராட்டினார்.

வீட்டிற்கு வந்து கண்ணன் பெட்டியைத் திறந்தான். ஆனால் அதில் ஒன்றுமில்லை. அவன் அழுது கொண்டே தூங்கிவிட்டான். அந்தத் தேவதை மறுபடி கனவில் வந்து சொன்னது: "நீ ஆசிரியர் புகழ்வதற்காகத் தானம் கொடுத்தாய், புகழ்ச் சொல் கிடைத்தது. இப்போது ஏன் அழுகிறாய்? ஏதாவது புகழ் ஆசையால் நல்ல காரியம் செய்தால் அது வியாபாரம், அது புண்ணியமில்லை."

மறுநாள் இரண்டு ரூபாய்க்கு இரண்டு ஆரஞ்சு வாங்கினான். அவன் நண்பன் மோதிலால் காய்ச்சலாக இருந்தான். நண்பனைப் பார்க்க அவன் வீட்டிற்குச் சென்றான். மோதிலாலைப் பார்க்க அவன் வீட்டிற்கு வைத்தியர் வந்திருந்தார். வைத்தியர் மருந்து கொடுத்து மோதிலாலின் தாயாரிடம் "இவனுக்கு இன்று ஆரஞ்சு ரஸம் கொடுங்கள்" என்றார். மோதிலாலின் தாய் ஏழை. அவள் அழுது கொண்டே "நான் கூலி வேலை செய்யறேன். பையனின் காய்ச்சலால் வேலைக்குப் போக முடியவில்லை. என்னிடம் ஆரஞ்சு வாங்கப் பணம் இல்லை" என்றாள்.

கண்ணன் தன்னுடைய இரண்டு ஆரஞ்சுகளையும் மோதிலாலின் தாயாரிடம் கொடுத்தான். அவள் கண்ணனை வாழ்த்தினாள். வீட்டிற்கு வந்து பெட்டியைக் கண்ணன் திறந்ததும் அதில் இரண்டு ரூபாய்கள் மின்னிக் கொண்டிருந்தன.

கண்ணன் முதலில் காசு பெறும் ஆசையால் நற்செயல்களில் ஈடுபட்டான். மெல்ல மெல்ல அவன் இயல்பும் சீரடைந்தது. நற்செயல்கள் செய்யச் செய்ய பெட்டியும் ரூபாய்களால் நிரம்பியது.

மரத்தடியில் அமர்ந்தவாறு வயதான துறவி ஒருவர் அழுது கொண்டிருப்பதைக் கண்ணன் பார்த்தான். அவன் துறவியின் அருகில் ஓடி வந்து "ஐயா! ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"உன் கையிலிருக்கும் பெட்டியைப் போலவே என்னிடமும் ஒரு பெட்டி இருந்தது. நான் சொர்க்கத்தைப் பார்க்கும் ஆசையால் பல தினங்கள் சிரமப்பட்டு பெட்டியை நிரப்பினேன். ஆனால் இன்று நான் குளிக்கும்போது பெட்டி ஆற்றில் விழுந்துவிட்டது" என்றார். உடனே கண்ணன் "என்னுடைய பெட்டியும் நிரம்பி உள்ளது. இதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

துறவி, "இதை நீ கஷ்டப்பட்டு நிரப்பியிருப்பாயே?" என்று கேட்டார்.

கண்ணன் "நான் வருந்த நேராது. நானோ சிறுவன். பல காலம் இன்னும் வாழ்வேன். நான் இதைப் போல் பல பெட்டிகளை நிரப்ப முடியும். நீங்களோ முதியவர். மற்றொரு பெட்டியை நிரப்ப முடியுமா? அதனால் என் பெட்டியை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.


துறவி பெட்டியை எடுத்துக் கொண்டு கண்ணனின் கண்களைக் கையால் பொத்தினார். அவனுக்குச் சொர்க்கம் தெரிந்தது.

- பா. திருபுர சுந்தரி,
பதினோராம் வகுப்பு,
எம்.வி. முத்தையா பிள்ளை
மாரியம்மாள் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
திண்டுக்கல்

திண்டுக்கல் ஸ்பெஷல்

பொது அறிவு

1. சிவப்பு நகரம் எது?
2. சிவப்பு வண்ணக் கொடி எங்கு?
3. மஞ்சள் வண்ணக் கொடி எதற்கு?
4. கறுப்பு நோய் எது?
5. வெள்ளை நாடு எது?
6. வெள்ளைத் தங்கம் எது?
7. வெள்ளை நகரம் எது?
8. வெள்ளைப் புரட்சி எது?
9. வெள்ளை மாளிகை எது?
10. கரும்பொன் எது?



- இரா. செல்லச் சடையாண்டி,
ஒன்பதாம் வகுப்பு, அ.உ.நி. பள்ளி,
பள்ளபட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

விடைகள்: 1) ஜெய்ப்பூர், 2. போர் நடக்கும் இடம், 3. நோய் உள்ளதற்கான அடையாளம், 4. பிளேக், 5. தாய்லாந்து, 6. பருத்தி, 7.பெல்கிரேடு, 8. பால்வளம் அதிகரிப்பு, 9. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மாளிகை, 10. இரும்பு.

மனம் தளராமல்...

நான் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு ஓவியம் வரைந்தேன். என் நண்பனிடம் காண்பித்தேன். அவன் நன்றாக உள்ளது, நீ வருங்காலத்தில் பெரிய ஓவியனாக வருவாய் என்று பாராட்டினான். ஆனால் என்னுடன் பயிலும் சில மாணவர்கள் இழிவாகப் பேசினார்கள்.



என் நண்பன் மட்டும் ''மற்றவர் சொல்வதைக் கேட்காதே! நீ கண்டிப்பாக ஓவியனாக வருவாய்'' என்று ஆறுதல் கூறினான். அவனுடைய ஆறுதலைக் கேட்டு நம்மால் ஓவியராக முடியும் என்ற நம்பிக்கை என்னிடம் இருந்தது. எனக்கு நூலகம் செல்லும் பழக்கம் உண்டு. அதன் வாயிலாக அங்கு இருக்கும் நாளிதழ், வார இதழ், மாத இதழ் போன்றவற்றில் வெளிவரும் போட்டிகளில் பங்கு கொள்வேன்.

நான் அனுப்பி இருந்த படைப்புகளில் ஒரு ஜோக் மட்டும் வெளி வந்தது. அது வெளி வந்ததும், எனக்கு மகிழ்ச்சியாய் இருந்தாலும் மற்ற படைப்புகள் வெளி வராதது வருத்தத்தைத் தந்தது. இருப்பினும் என் நண்பன் எனக்கு ஆறுதல் கூறி மீண்டும் தொடரச் செய்தான்.

இன்று கதை, கவிதை, ஓவியம், பாடல் போன்றவற்றில் பல பரிசுகளைத் தட்டிச் செல்வது வழக்கம் ஆகிவிட்டது. அன்று இழிவாய் பேசிய நண்பர்கள் இன்று கேட்டு, வாங்கி படிக்கின்றனர் என் படைப்புகளை.

இதிலிருந்து மனம் தளராமலும், தன்னம்பிக்கையுடனும் செய்தால் எப்படிப்பட்ட செயலானாலும் இனிதாய் முடிவடையும் என்பதை உணர்ந்தேன்.

- ப. சரவணக்குமார், ஒன்பதாம் நிலை, அரசு உயர்நிலைப் பள்ளி,
க. தருமத்துப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

‘ங்...ங்...ங்...’ என்ற சத்தத்துடன் பறந்து வரும் குளவியைக் கண்டு நாம் பயந்து காதை மூடிக் கொள்வோம்.

எறும்பு, தேனீ, ஈ போன்றவற்றின் உறவுக்காரர்கள் இந்தக் குளவிகள். ஒளி ஊடுருவும் நான்கு சிறகுகள் வரிசையைச் சேர்ந்தவை இவை (Hymenopetera). இவற்றிலும் ராணிக்குளவி, ஆண் குளவி, வேலைக்காரக் குளவிகள் என

கூடு கட்டும் குளவிகள்



மூன்று பிரிவுகள் உண்டு.

குளவியின் தலையில் இரண்டு உணர் இழைகள், ஒலியைக் கேட்கப் பயன் படுகின்றன. கூட்டுக் கண்களுக்கு அருகில் மூன்று ஒற்றைக் கண்களும் உண்டு. வயிற்றுப் பகுதியின் கடைசியில் கொடுக்கு இருக்கிறது.

பல குளவிகள் சேர்ந்து கூட்டமாக ஒரே சமூக வாழ்க்கை நடத்து கின்றன. தனியாக வாழும் குளவிகளும் உண்டு.

‘பானைக்காரன்’ குளவி களி மண்ணால் பானை போன்று சிறிய கூடுகளைக் கட்டுகிறது.

மக்கிப் போன மர நார்கள், தாவரங்களின் தண்டுகள் போன்ற வற்றை வாயில் போட்டு உமிழ் நீரால் அரைத்து கூழாக்கு கின்றன. அதைக் கொண்டு மரக் கிளைகளில் அல்லது கூரைகளில் கீழ் நோக்கித் தொங்குமாறு கூடுகளை அமைக்கின்றன ‘காகிதக் குளவிகள்.’ இந்த வகை குளவிகள் மூலம்தான் மனிதன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காகிதம் செய்ய அறிந்து கொண்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.




நிலத்துக்கு அடியிலும் சில வகைக் குளவிகள் கூடு கட்டுகின்றன. இவை ‘மணல் குளவிகள்! அத்திக்காய்க்குள் இருக்கும் பூச்சிகளும் குளவிகள்தான். இவை மகரந்தச் சேர்க்கைக்குப் பெரிதும் உதவுகின்றன.

குளவிகளில் 20,000 வகைகள் உண்டு.

சித்திரை, வைகாசி மாதங்களில் ராணிக் குளவி, கூட்டில் ஒவ்வொரு அறையிலும் ஒரு முட்டை இடும். சுமார் 5000 முட்டைகள் வரை இடும். இந்த





முட்டைகள் பொரிந்து வெளி வரும் புழுக்கள் வளர்ந்து வேலைக்கார குளவிகளாகின்றன. இவை குளவிக் கூட்டுக்குப் புதிய அறைகள் கட்டும். புதிதாக உருவாகும் குளவிப் புழுக்களை வளர்க்கும். மற்ற வேலைகளைச் செய்யும். இதில் சில புழுக்கள் ராணிக் குளவிகளாகவும், ஆண் குளவிகளாகவும் மாறும். குளிர் காலம் வந்தவுடன் ராணிக் குளவி மட்டும் குளிர் காலத் தூக்கம் கொள்ளும். மற்ற குளவிகள் இறந்து போய்விடுகின்றன. மீண்டும் ராணிக் குளவி ஒவ்வொரு கூட்டிலும் முட்டையிடத் துவங்கும்.

வேலைக்காரக் குளவிகள் புழுக்களைப் பிடித்து விஷத்தைச் செலுத்தி அவற்றைக் கொன்று விடுகின்றன. இந்தப் புழுக்களைக் கொண்டு வந்து கூட்டுக்குள் வைக்கின்றன. இந்தப் புழுக்களின் மேல் ராணிக் குளவி முட்டையிடும். பிறகு கூட்டை வேலைக்காரக் குளவிகள் மூடி விடுகின்றன. முட்டையிலிருந்து லார்வாக்கள் வெளி வந்து புழுக்களைத் தின்று வளருகின்றன. முழு வளர்ச்சியடைந்ததும் கூட்டை உடைத்துக் கொண்டு முழு பூச்சிகளாக வெளி வருகின்றன.

கரப்பான், சிலந்தி போன்ற பூச்சிகளே குளவிகளின் முக்கிய உணவு.

தேனீக்களால் ஒரு தடவைதான் கொடுக்கைப் பயன்படுத்த முடியும். ஆனால் குளவிகளுக்கு அந்தப் பிரச்னை இல்லை.

வட அமெரிக்காவில் வாழும் இந்நியூமன் குளவிதான் மிகப் பெரியது. இது 11 செ.மீ நீளம் இருக்கும். அத்திப் பழக் குளவிதான் மிகச் சிறியது.

குளவி பறக்கும்போது வரும் சத்தத்திற்குக் காரணம் அதன் இறகுகள் படபடப்பதே!

எஸ். சுஜாதா






போட்டி

1000/- ரூபாய் பரிசு!

இந்தப் போட்டி உங்களிடம் எவ்வளவு வரவேற்பை பெற்றிருக்கிறது என்பதை மலைபோல் குவியும் கூப்பன்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இதுவரை நிறைய பேர் பரிசு வாங்கியிருக்கின்றீர்கள். பரிசு கிடைக்காதவர்கள் மனம் கலங்க வேண்டியதில்லை. இந்தப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெறும் வாய்ப்பு கண்டிப்பாக உங்களுக்கும் இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது : உங்கள் பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன், உங்கள் பள்ளி, வீட்டு முகவரி மற்றும் சரியான விடைகளை அளிப்பது மட்டும்தான்! மொத்தப் பரிசு ரூ.1000/- சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 20.04.2003.





ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97.

இந்த மாதப் போட்டி
பொருத்துக

1.	டோராடூன்	ஜிம்பாப்வே
2.	ஒப்போசம்	ஏரி
3.	ஃபிளவர் சகோதரர்கள்	206
4.	காஸ்பியன் கடல்	வட அமெரிக்கா
5.	மனித எலும்புகள்	உத்ராஞ்சல்
6.	முதல் விண்வெளி வீரர்	ரஷ்யா

7. தாய் தரையில் கிடக்க; மகள் அரியணையில் இருக்கிறாள் - யார் இவர்கள்?
8. மேலே உள்ள படத்தில் இருப்பது என்ன?



நேரம் வரும் காத்திரு!

3. மர்ம போன்

காலை 11.00 மணி.

பொற்கேணி பள்ளி பிரின்ஸ்பால் அறை பரபரப்பாக இருந்தது. பக்கத்தில் இருந்த கான்ஃபிரன்ஸ் ஹால் தயாராகிக் கொண்டிருந்தது. ஏதோ முக்கிய மான கூட்டம் நடக்கப் போகிறது என்பது புரிந்தது.

"சதாசிவம் எல்லா ஏற்பாடும் முடிஞ்சுதா? கரஸ்பாண்டண்ட் கிளம்பிட்டா ராம். இன்னும் கால் மணி நேரத்துல வந்துடுவார். நானும், வைஸ் பிரின்ஸ் பாலும் அவரைப் பார்த்துக்கறோம். யூ.சி.சி கப் ஜெயிச்ச நம்ம கிரிக்கெட் டீம் பாய்ஸ்ஸ கவுரவிக்கப் போறோம்! எஸ்.பி.யை வரச் சொல்லியிருக்கு! நீங்க ரெடியாயிருங்க! எஸ்.பி. நம்ம கரஸ்பாண்டண்டுக்கு ரொம்ப வேண்டிய வர். அது ஞாபகத்துல இருக்கட்டும்'' என்றபடி ஏற்பாடுகளைச் சரி பார்த்தார் பிரின்ஸ்பால்.

''ஓகே சார்!'' என்றபடி நகர்ந்தார் சதாசிவம்.

மருத்துவமனை ட்ரீட்மெண்ட்டில் இருந்த அருணின் அறையில் டாக்டர் ஒருவர் அருணைச் சோதித்துக் கொண்டிருக்க, அவனது அம்மா அருகில் நின்று ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''டாக்டர் அருணுக்கு இப்ப எப்படியிருக்கு? இன்னைக்கு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாமா?'' என்றார் அருணின் அம்மா.

''இப்ப பரவாயில்லைம்மா! வீக்கமெல்லாம் குறைஞ்சிருக்கு. என்ன அருண்? அப்படித்தானே!'' என்றார் டாக்டர்.

"ஆமாம் டாக்டர்! இப்ப வலி இல்லை. ஆனா காலை அசைக்கக் கூடா துன்னா ரொம்ப கஷ்டமாயிருக்கு! எப்ப டாக்டர் வீட்டுக்கு அனுப்புவீங்க?"

"அவசரப்படாதேப்பா! இன்னைக்கு இருக்காது! நாளைக்குப் பார்த்துட்டு, அப்புறம் தான் முடிவெடுக்க முடியும்."

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே கையில் கார்ட்லஸ் ஃபோனுடன் வந்தார் நர்ஸ்.

டாக்டரைப் பார்த்ததும், ''குட் மார்னிங் டாக்டர்! அருணுக்கு ஃபோன்

வந்திருக்கு! கரஸ்பாண்டண்ட் பேசறார்'' என்றார்.

அருண் ஃபோனை வாங்கிப் பேசினான்.

பரிசு வழங்கிய எஸ்.பி. பாண்டியன், பள்ளியின் கரஸ்பாண்டண்டிடம் பேசியபடியே அவரது அறைக்குள் நுழைந்தார். அறைக்கதவு சாத்தப்பட்டது. அறைக்குள் பிரின்ஸ்பால், வைஸ் பிரின்ஸ்பால் இருந்தனர்.

தீவிரமாக விவாதம் நடந்தது. அவர்களது பேச்சுக்கிடையில் -

''ஆமாம் சார்! இந்த விஷயம் நடந்தது, ஸ்கூல் காம்பவுண்டுக்குள். இது பத்தி வெளியில யாருக்கும் அதிக மாத் தெரிய வாய்ப்பில்லை. அதுவும் ஃபுட் பாய்ஸன்னு கரெக்டா சொல்லி மிரட்டறாங்கன்னா... யாரோ திட்டமிட்டு இப்படி பண்றாங்கன்னு தோணுது. அதோட, அவங்க ஸ்கூலோட சம்மந்தப்பட்ட ஆளுங்களாத்தான் இருக்கணும்ன்னு எனக்குத் தோணுது'' என்றார் வைஸ் பிரின்ஸ்பால்.

''அப்படியா! அது எப்படி சொல்றீங்க?'' என்றார் எஸ்.பி.

''இது நடந்து ரெண்டு நாள்தான் ஆகுது. ப்ரேயர்ல பசங்க சுருண்டபோது, வயித்து வலின்னுதான் சொன்னாங்க! சிக் ரூம் போன பிறகு சிலர் வாந்தியெடுத்தாங்க! பழைய ஸ்நேக்ஸ் மாதிரி ஏதோ சாப்பிட்டு, அது ஒத்துக்காம இப்படி ஆயிடுச்சுன்னுதான் எல்லாரும் நெனச்சோம். டாக்டர்தான் ஃபுட் பாய்ஸனா இருக்கலாம்ன்னு சொன்னார்.''

''டாக்டர் சொன்ன பிறகு விசாரிச்சிப் பார்த்தோம். அவங்ககூட சாப்பிட்ட மத்த 50... 60 பேருக்கு எந்த ப்ராப்ளமும் இல்லை. ஒரு பத்து பேருக்கு மட்டும் வாமிடிங் இருந்தது.''

''எந்த அடிப்படையில இது ஸ்கூல் சம்மந்தப்பட்ட ஆளுங்களாயிருக்கும்ன்னு சொல்றீங்க? அதை மட்டும் சொல்லுங்க!''

''அது சார்... இந்த ஃபோன் வந்தது ஹாஸ்டலுக்கு! அந்த நேரத்துல பிரின்சி இல்லைன்னும் நானும் ஹாஸ்டல்ல இருக்கேன்னும் வெளியில இருக்கறவங்க வேற யாருக்குத் தெரிஞ்சிருக்கப் போகுது? இப்படியொரு சதி திட்டம் போடறவன் பொதுவா ஸ்கூல் ஆபிஸுக்கு இல்லையா பேசுவான்? நான் அங்க இல்லைன்னு தெரிஞ்சி, ஹாஸ்டல்ல இருக்கறதும் தெரிஞ்சவன் கட்டாயம் இங்க உள்ள ஆளாத்தானே இருக்கணும்?''

''இருக்கலாம். ஆனா உங்ககிட்ட பேசத்தான் அவன் முயற்சி பண்ணதா நீங்க எப்படி நினைக்கிறீங்க? ஹாஸ்டல் சம்மந்தப்பட்ட விஷயங்கறதால அங்க போன் பண்ணியிருக்கலாம். ஃபோனை நீங்க எடுக்காம, வேற யாரும் எடுத்திருந்தா கூட, அவங்க கிட்டயும் சொல்லியிருக்கலாமில்லையா? நீங்க போனை எடுத்தது தற்செயலான விஷயம்ன்னு நான் சொல்றேன். உங்ககிட்ட மறுப்பு இருக்கா?''

வைஸ் பிரின்சி பதில் பேசவில்லை.

''என்னங்க வி.பி? கம்முன்னு இருந்தா எப்படி? எஸ்.பி கேக்கறதுக்குப் பதில் சொல்லுங்க! நம்ம ஆட்கள் மேலேயே சந்தேகம் இருக்குன்னு நீங்க சொன்னதால



இவரை வரச் சொன்னேன். கிரிக்கெட் டீமை கவுரவிக்கறது எல்லாம் சும்மாதான். ஒரு வேளை நீங்க சொன்ன மாதிரி உள் ளுக்குள்ளேயே சதிகாரங்க இருந்தாலோ, வேற யாரும் விளையாட்டா செஞ்சிருந் தாலோ... அவங்களுக்கு ஒரு எச்சரிக் கையா இருக்கட்டும்ன்னுதான் எஸ்.பி. வரேன்னு ஒத்துக்கிட்டார்'' என்றார் கரஸ்பாண்டண்ட்.

''அப்படியா சார்! எஸ்.பி. சொல்றதும் சரிதான். இந்த விஷயம் சென்சிடிவ்வானது; நம்ம ஸ்கூல் பேரோடு சம்மந்தப்பட்டதுன்ற தால எனக்கு என்ன தோணுச்சோ, அதை அப்படியே உங்ககிட்ட சொல்லிட்டேன். ஆனா, எஸ்.பி. சொல்ற மாதிரியும் நடந் திருக்கலாம்ன்னு இப்ப தோணுது! உறு தியா எதையும் சொல்ல முடியலை. அந்தக் குரல் பத்தி யோசிச்சா... அது ஒரு ப்ரொபச னல் திருடன்... அல்லது நீண்ட நாள் ரவுடி யோட குரல் மாதிரி... ஏனோ, எனக்குத் தோணலை.''

''குட்... நீங்க சொல்றதும் சரிதான் வி.பி சார்! நான் சொன்னதுக்கு எந்த அளவு வாய்ப்போ, அதே அளவு வாய்ப்பு நீங்க சொன்ன மாதிரி நடந்திருக்கவும் இருக் கத்தான் செய்யுது. ஒரே திசையில் இதைப் பார்க்கக் கூடாது! மறுபடி வேற ஃபோன் வருதான்னு பாருங்க! பரபரப்பா எதையும் செஞ்சிடாதீங்க! குற்றவாளி தானே வந்து மறுபடியும் வலைல மாட்டட்டும்ன்னு வெயிட் பண்ணுங்க! அதுக்கு முன்னாடி ஸ்கூல்ல இருக்கிற எல்லா லைனுக்கும் காலர் ஐடி இருக்கற ஃபோனை மாத்திடுங்க! இனி யார்கிட்ட இருந்து எந்த ஃபோன் வந்தாலும் எங்கிருந்து வருதுன்னு பார்த்து நம்பரை நோட் பண்ணிட்டு ஃபோனை அட்டெண்ட் பண்ணச் சொல்லுங்க! இது சம்மந்தமா எல் லாருக்கும் இன்ஸ்டரக்ஷன் கொடுத் துடுங்க!'' என்றார் எஸ்.பி.

மீட்டிங் தொடர்ந்தது.

மறுநாள் காலை 11.00 மணி. பொற்கேணி பள்ளியின் ஸ்டாஃப் ரூம். கரீமின் அப்பா, சதாசிவத்தைப் பார்க்க காத்திருந்தார்.

''ஹலோ... நீங்க கரீமோட ஃபாதர் இல்லே. முன்னாடி பார்த் திருக்கேன். சொல்லுங்க!''

''கரீம் ஒரு தப்பு பண்ணிட்டான்!



அதனால பிரச்னை வராம பார்த்துக் கணும்.''

''அப்படி என்ன பண்ணினான்?''

''அட்வஞ்சர் ஸ்டோரி புக் மாதிரி எதோ படிச்சிருக்கான். அதே மாதிரி டெஸ்ட் பண்ணலாம்ன்னு நெனைச்சி ஃபோன் எடுத்து கொஞ்சம் மிரட்டல் விட்டிருக்கான். என்னன்னு புரியாமத்தான் செஞ் சிட்டுருக்கான். இப்ப பயந்து நடுங்கறான். வீட்டுக்கு ஃபோன் பண்ணி 'ஒ'ன்னு அழறான்!''

''அப்படியா? அப்படி யாருக்கு ஃபோன் பண்ணான்? அப்படின்னா லும் சின்ன பையன் தெரியாம பண்ணிட்டான்னு சம்மந்தப் பட்டவங்ககிட்ட கூட்டிட்டுப் போய் 'ஸாரி' சொல்ல வேண்டியதுதானே!''

''அதுக்குதான் உங்களைப் பார்க்க வந்திருக்கேன். நீங்க தான் ஹெல்ப் பண்ணனும்.''

''நானா? புரியலையே! எனக்கு... மிரட்டல்... வரலையே!''

''அது வந்து... உங்களுக்கு இல்லை! நாலு நாள் முன்னாடி ஹாஸ்டல் மேனேஜருக்கு ஃபோன் பண்ணியிருக்கான். அப்ப ஃபுட் பாய்ஸன்ல பசங்க கஷ்டப்பட்டது தெரிஞ்சி, அதை வெச்சி இவங்க ஏதோ சதி செய்தது மாதிரி கற்பனை பண்ணி... ஃபோன் பேசியிருக்கான்! குரலை மாத்தி இவன் மிமிக் பண்ணபோது ரீஸீவரை எடுத்து பேசினது வைஸ் பிரின்ஸியாம். விஷ யம் தெரிஞ்சி, இப்ப பயப்படறான்!''

''சரி... அவனே ஃபோன் பண்ணான்னா எங்கிருந்து பேசி னானாம்?''

''நீங்க தப்பா நெனைக்கக் கூடாது. அவசரத்துக்கு உதவும்ன்னு வீட்ல இருந்து ஒரு செல்ஃபோனை எடுத்துட்டு வந்திருக்கான்! கைல ஃபோன் இருக்கவேதான் எதுவும் யோசிக்காம உடனே பண்ணியிருக் கான்!''

''செல்போனா? ஹாஸ்டல்லயா, வைச்சிருந்தாங்க! அதுவே தப் பாச்சே! எங்க ஸ்கூல் சட்டப்படி



இதுக்கே அவனை வெளிய அனுப்பிடு வாங்களே! அதுக்கு மேல மிரட்டல் வேறா?''

''அதுக்குத்தான் சார், உங்களை வந்து பார்க்கறேன். நீங்கதான் ஏதாவது பண்ணி பையனைக் காப்பாத்தணும். இந்த ஒரு முறை கொஞ்சம் மன்னிச்சிடுங்க சார்!''

பேசிக் கொண்டே கேண்டீனை அடைந் தனர். பேசியபடியே இருவரும் டீ குடித்து விட்டுக் கிளம்பினர்.

''சரி... இந்த விஷயம் வேற யாருக் கெல்லாம் தெரியும்?'' என்றார் சதாசிவம்.

''வேற யாருக்கும் தெரியாது சார்! அவ னோட கூட இருந்தது ராகவ் மட்டும்தான்!''

''சரி, பாக்கலாம். ஆனா வேற யாருக்கும் விஷயம் தெரிஞ்சி மாட்டிக்கிட்டால் நான் ஒண்ணும் பண்ண முடியாது. நீங்க செல் ஃபோனை வாங்கிட்டு அமைதியா கிளம் பிடுங்க! யார்கிட்டயும் இதைப் பத்தி மூச்சு விடக் கூடாதுன்னு சொல்லிட்டுக் கிளம் புங்க! இனியும் அவன்கிட்ட ஃபோன் இருந்தா, அப்புறம் நான் பொறுப்பில்லை!''

''சரி சார்! அப்படியே பண்ணிடறேன். இந்த முறை பிரச்னை வராம பார்த்துக் குங்க ப்ளீஸ்!''



"நீங்க கிளம்பிப் போன பிறகு அவன்க ரெண்டு பேரையும் வந்து என்னைத் தனியா பார்க்கச் சொல்லுங்க! சரியா?"

"ஓகே! ரொம்ப தேங்க்ஸ் சார்!"

கரீமின் தந்தை நன்றி கலந்த பார்வையுடன் சதாசிவத்திடம் விடை பெற்றார்.

ஒரு வாரத்துக்குப் பின்...

பொற்கேணி பள்ளியின் ஆண்டு விழாவுக்கான ஏற்பாடுகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தன. விஐபிக்களின் பட்டியல் போட்டு ஊரெங்கும் போஸ்டர் ஒட்டி அமர்க்களப்படுத்தி, மாணவர்களுக்கு நிறைய ரிகர்சல் எல்லாம் நடந்து கொண்டிருந்தன. பிரின்ஸ்பால் அழைத்ததின் பேரில் அவர் அறைக்கு வந்திருந்தார் வைஸ் பிரின்சி.

ஆண்டு விழாவில் படிக்க வேண்டிய ஆண்டறிக்கை நகலைச் சரி பார்த்துக் கொண்டிருந்தபோது அங்கு டெலிபோன் ஒலித்தது.

ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...

வைஸ் பிரின்ஸி போனை எடுத்து, "ஹலோ..." என்றார்.

"ஹ்ஹ்ஹஹ்ஹா... என்னய்யா? ஞாபகம் இருக்கா? ஃபுட் பாய்ஸனோடு விஷயம் முடிஞ்சிடாது. நேரம் வரும் காத்திருன்னு சொன்னேனே ஞாபகமில்லையா? மறந்துட்டே இல்லை? சரி விஷயத்துக்கு வரேன். போனமுறை தப்பிட்டீங்க! இந்த முறை தப்ப முடியாது. உங்க ஆண்டு விழா அன்னைக்கு என் வேலையைக் காட்றேன் பாரு! அப்ப தெரியும் நான் யாருன்னு! கொஞ்சம் காத்திட்டு இருக்கியா?"

"ஹலோ... யார் பேசறது? என்ன... என்ன வேணும் உங்களுக்கு?"

"மடையா... சும்மா ஃபோனை வைடா. அந்த நேரம் வரட்டும். அப்ப பாருடா!"

லைன் கட்டானது. வைஸ் பிரின்ஸியின் பதட்டத்தையும், வேகத்தையும் பார்த்து பிரின்ஸ் பாலும் டென்ஷனாகி, "என்னப்பா! என்ன விஷயம்? யார் ஃபோன்ல? என்ன சொல்றாங்க! எதுக்கு டென்ஷன் ஆகறீங்க!" என்றார்.

"இல்லை சார்... மறுபடியும் ஃபோன்ல யாரோ மிரட்டறாங்க! ஆண்டு விழா அன்னைக்கு அவன் வேலையைக் காட்டப் போறானாம். 'அப்ப பாரு நான் யாருன்னு' சொல்லி ஃபோனை வெச்சிட்டான். என்ன பண்ணப் போறான்னுகூட சொல்லலை..."


"சரி... அந்த ஃபோன் எங்கயிருந்து வந்திருக்குப் பாருங்க! ஆப்ரேட்டரைக் கூப்பிட்டு அந்த நம்பரைக் கேளுங்க!"

"இல்லை சார்! இது, உங்க டைரக்ட் லைன். இப்ப ஐந்து காலர் ஐடி போன் வாங்கினதுல ஒண்ணு சரியா ஒர்க் பண்ணலை. மாத்தி தரச் சொல்லியிருக்கேன். இங்க பழைய ஃபோனே வைச்சிருக்கோம். அதனால நம்பர் கண்டுபிடிக்க முடியாது!"

"அப்படின்னா... அந்த விஷயம் தெரிஞ்சி, கரெக்டா இந்த ஃபோனுக்குப் பண்ணியிருக்கானே! சரி, எஸ்.பி.க்கு ஃபோனைப் போடு!"

(தொடரும்)

உயர்வுக்கு வழி - உழைப்பு



சமிந்தா வாஸ்


வாசிம் அக்ரம்
கோகுலம்
போஸ்டர்

மறக்க முடியவில்லை




மழை

ஒரு நாள் மழை பெய்து கொண்டிருந்தது. என் தங்கை, "அக்கா, மழை பெய்கிறதுக்கு ஆங்கிலத்திலே எப்படி சொல்வது?" என்று கேட்டாள். "இட் ஈஸ் ரெய்னிங்" என்று சொல்லிக் கொடுத்தேன். அடுத்த நாளும் மழை பெய்யவே, என் தங்கையிடம், "மழை பெய்கிறதுன்னு இங்கிலீஷ்ல சொல்லு பார்ப்போம்" என்றேன். அவளுக்கு ஞாபகத்துக்கு வரவில்லை. ஒரு நிமிடம் யோசித்து விட்டு, "மழை ஈஸ் பேஞ்சிங்" என்றாளே பார்க்கலாம்!

— ப. சௌந்தர்யா, மடிப்பாக்கம், சென்னை.

கையில்...


ஒரு சமயம் என்னுடைய பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் மருத்துவமனையில் சேர்த்திருந்தோம். அவருடைய உடல்நிலை குறித்து என் அப்பா டாக்டரிடம் விசாரித்தார். அதற்கு டாக்டர், "எல்லாத்துக்கும் மேலே ஆண்டவன்னு ஒருத்தன் இருக்கான். என் கையில ஒண்ணும் இல்லை!" என்றார். உடனே அருகிலிருந்த எங்கள் வீட்டு வாண்டு பிரணவ், "ஏன் டாக்டர் பொய் சொல்றீங்க? உங்க கையில ஸ்டெதஸ்கோப் இருக்கே!" என்றதும் அந்தச் சூழ்நிலையிலும் எங்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.



— ஆர். பிரசன்னா, காந்திகிராமம்.

எடுத்துக்காட்டு

எங்கள் தமிழாசிரியர் இலக்கணக் குறிப்பு கூறும்படி கேட்டுக் கொண்டு வந்தார். என் நண்பனிடம் வந்து, "ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்திற்கு எடுத்துக் காட்டு கூறு" என்றார். அவன் உடனே எழுந்து, "பல் விழும்" என்றான். எப்படி என்று ஆசிரியர் கேட்டார். அதற்கு, "ஈறு கெட்டால் பல்தான் விழும் ஐயா" என்றான். எங்களுக்கோ சிரிப்பு. ஆனால் அடக்கிக் கொண்டோம். கோபமடைந்த ஆசிரியர் ஈறு கெட்ட எதிர்மறைப் பெய



ரெச்சத்திற்கு நூறு எடுத்துக்காட்டுகள் எழுதிவரும்படி அவனிடம் கூறிவிட்டார்!

— த. சிவபாரதி, அயலூர்.

எந்த ஊர்?

திருவாரூரிலிருந்து குடும்பத்தோடு மன்னார்குடிக்கு அரசுப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தோம். அப்போது 'இந்த பஸ் எந்த டெப்போவைச் சேர்ந்ததாயிருக்கும்' என்ற பேச்சு வந்தது. நாங்கள் மூவரும் ஒவ்வொரு ஊரைச் சொல்ல, என் தம்பி ''கண்டிப்பாகத் திருவாரூர் டெப்போவைச் சேர்ந்ததுதான்'' என்றான். பின்னால் நடத்துனரிடம் கேட்டு உறுதி செய்து கொண்டோம். பிறகு ''எப்படி நீ மட்டும் சரியாகச் சொன்னாய்?'' என்றோம். ஓட்டுநர் இருக்கைக்கு மேலே STD code நம்பருடன் டெப்போவின் தொலைபேசி எண்




இருப்பதைக் காட்டி ''இதைப் பார்த்துதான்'' என்றான். அந்த எண் திருவாரூரைச் சேர்ந்தது. அவனைப் பாராட்டினார் அப்பா.

— டி. வரதராஜன்,
திருவாரூர்

படிப்பு வராது!

களி மண்ணால் செய்து வண்ணம் தீட்டிய பொம்மைகளை விற்றுக் கொண்டு ஒருவர் வந்தார். அவரிடம் அழகழகான சாமி பொம்மைகள் இருந்தன. அதில் நாங்கள் லக்ஷ்மி பொம்மையை வாங்கினோம். விலை அதிகமாயிருந்ததால் அந்த ஒரு பொம்மை மட்டுமே வாங்கினோம். ஆனால் என் தங்கை சரஸ்வதி பொம்மையும் வாங்க வேண்டுமென அடம்பிடித்தாள். அதெல்



லாம் வாங்க முடியாதென்று சொன்னோம். அதற்கு அவள் ''நான் இனிமேல் பள்ளிக்கூடத்திற்குப் போக மாட்டேன்'' என்றாள். ''ஏன் அப்படி சொல்றே?''என்றேன். ''சரஸ்வதிதான் படிப்பையே தர்றது... அது நம்ம வீட்ல இல்லைன்னா நான் பள்ளிக்கூடம் போய்ப் படிச்சாலும் படிப்பு சரியா வராதே... அதான் அந்த சரஸ்வதி பொம்மையை வாங்கச் சொல்றேன்'' என்றாள். அவளின் சாமர்த்தியப் பேச்சை ரசித்த நாங்கள் லக்ஷ்மி பொம்மையோடு சரஸ்வதி பொம்மையையும் வாங்கினோம்.

— ப. ராமகிருஷ்ணன், அறந்தாங்கி

அப்பாவிப் பூரானும் சுயநலப் பாம்பும்!

மோஹன் - சிபி.சி.ஜெ






பாம்புக்குப் பயம் ஏற்பட்டது.
ஹா... ஹா... இன்னிக்கு நல்ல விருந்து!
என் நண்பன் வெளியில் இருக்கிறான்.
நீ அவனைப் பார். பிறகு என்னைச் சாப்பிடலாம்.
சரி.
© 2001 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
கீரிப்பிள்ளை வெளியே வந்தது.
ஏய், தப்பிக்க முயற்சி பண்ணாதே!
இவன் என் நண்பன்.
கீரி அண்ணா, முதலில் என்னைச் சாப்பிடு. பிறகு பாம்பைச் சாப்பிடலாம்.
ஏய், பாம்பு! பூரான் என்ன சொல்கிறது?
நாங்கள் இணை பிரியா நண்பர்கள். என்னுடன் சேர்ந்து சாக விரும்புகிறது.
உங்க விருப்பத்திற்கு எதிராக நான் எதுவும் செய்ய விரும்பலை.
அடுத்த நொடி -
அதிசயமான நட்புதான். ஹி... ஹி...
ஐயோ! அடுத்தது நான்.
பூரான் கீரிப்பிள்ளையின் வாயில் புகுந்தது.
ஐயோ!
அப்பாடி!
வாய்க்குள் ஏதோ தந்திரம் பண்ணுகிறதே!


கீரிப்பிள்ளை பூரானைத் துப்பியது.
நீ என்னை மறுபடியும் காப்பாற்றி விட்டாய்.
சீக்கிரம் வா, போகலாம்.
மீண்டும் பயணம் செய்தன.
சீக்கிரமாகப் போ. மழை வரும் போலிருக்கு.
முக்காபுலா... முக்காபுலா..
ஐயோ! ஆறு.
நாம் இதைக் கடந்து விடலாம்.
உனக்கு நீச்சல் தெரியாதா? கவலை வேண் டாம். என்னை கெட்டியாகப் பிடித்துக் கொள்!
© 2001 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
ஆஹா! கீழே மீன் நிறைய இருக்கு.
வேண்டாம் கீழே போகாதே!
மீனைச் சாப்பிடற அற்புதமான வாய்ப்பை விடுவேனா?
போகாதே! வேண்டாம்.
பாம்பு பூரானின் பேச்சைக் கேட்காமல் நீருக்குள் சென்றது.
உதவி... உதவி.. உதவி..
சுயநலக்காரர்களால் எப்பொழுதுமே ஆபத்துதான்.

டி. ஜானகி



அரிசி திருடியது யார்?

சுவை மிகுந்த திராட்சைக் கொத்துகளை எத்தனை நேரம்தான் நாவில் நீர் வடிய பார்த்துக் கொண்டே நிற்பது? பலத்தை எல்லாம் திரட்டி, மூச்சை இறுக்கிப் பிடித்து உயரமாக எம்பியபோது, மறு வினாடி 'பொத்' என்ற ஒலியோடு கீழே விழுந்தது நரீஷ்.

அப்பொழுது ஹ...ஹ்....ஹ...ஹா... என்று சிரிக்கும் ஒலி கேட்கவே, சீற்றத்தோடு திரும்பிப் பார்த்தது நரீஷ். அங்கே ஜிக்கு என்ற யானை நின்று கொண்டிருந்தது.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னைக் கூப்பிட்டு, 'நான் உன் முதுகுமேலே நின்னுகிட்டுத் திராட்சைப் பழம் பறிச்சுக்கிறேன், ஹெல்ப் பண்ணு' அப்படின்னு நீ என்கிட்டே சொன்னபோது, நான் என்ன சொன்னேன்?"

நரீஷ் பதில் சொல்லாமல் சீற்றத்தோடு ஜிக்குவையே முறைத்துக் கொண்டிருந்தது.

"மத்தவங்க தோட்டத்திலேருந்து திருடித் திங்கறது பாவம். இது கரடி அண்ணாச்சியோட தோட்டம். மாட்டிகிட்டா நம்ம இரண்டு பேரோட வாலையும் கட் பண்ணிவிடும். மாற்றான் தோட்டத்து திராட்சைக்கு ஆசைப்படாதேன்னு அட்வைஸ் பண்ணினேன் இல்லே. கேட்கலே... நல்ல காலம் உனக்கு அடி பலமா இல்லே. கிட்டாதாயின் சட்டுனு மற. இந்த இடத்தைக் காலி செய்"— கூறியபடி ஜிக்கு சென்றது.

"ஏய், ஜிக்கு! எனக்கு நீ ஹெல்ப் செய்யாட்டியும் பரவாயில்லே. அட்வைஸ் பண்ணறே. கிண்டல் வேறு. என்னைத் திருடன்னு வேற சொல்லாமல் சொல்லிட்டே. இரு...இரு... உன்னை எப்படியாவது எதிலாவது மாட்டிவிட்டு, நீதான் திருடன்னு மத்த விலங்குகள் எல்லாம் நினைக்கிறபடி நான் செய்யலே, என் பேரு நரீஷ் இல்லே...." மனதிற்குள் சபதம் போட்டது.

கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் சென்று விட்டன. அன்று மாலை நரீஷின் கண்களுக்கு அகலமான பாறையின் மீது நான்கைந்து சாக்கு மூட்டைகள் கட்டி வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அருகில் சென்று மெதுவாக ஒரு மூட்டையை அவிழ்த்துப் பார்த்தது. அதற்குள் அரிசி. மற்ற மூட்டைகளையும் தொட்டுப் பார்த்த உடனேயே, அவற்றிலும் அரிசிதான் இருக்கிறது என்று தெரிந்து கொண்டது. முதலில் அவிழ்த்த மூட்டையை முன்பு போல் அழகாகக் கட்டியது.

நரீஷின் மூளையில் ஒரு திட்டம் பளிச்சிட்டது. 'இங்கிருந்து ஒரு அரிசி மூட்டையை எடுத்து ஜிக்குவின் வீட்டிற்குள் அதற்குத் தெரியாமல் வைத்துவிட வேண்டும். இந்த மூட்டைகளுக்குச் சொந்தக்காரன் யார் என்று தெரியவில்லை. கட்டாயம் மூட்டையை எடுக்க வருவான். காணாமல் போன மூட்டையை யார் எடுத்திருப்பார்கள் என்று தேடுவான். தன் மூட்டையை ஜிக்குதான் எடுத்துச் சென்றது என்று நம்பும்படியாக இந்த இடத்திலிருந்து அரிசியை ஜிக்கு வீடுவரை சிறிது சிறிதாகச் சிந்திக் கொண்டே போக வேண்டும். மூட்டைக்குச் சொந்தக்காரன் ஜிக்குவின் வீட்டில் அரிசி மூட்டை இருப்பதைச் சுலபமாகக் கண்டு பிடித்து விடுவான். ஜிக்குதான் குற்றவாளி என்று சண்டைக்கு வருவான்.'


'டேய் ஜிக்கு, அன்னிக்கு எனக்கு என்ன அட்வைஸ் பண்ணினே? மத்தவங்க பொருளை எடுக்கறது பாவம். இப்ப என்ன சொல்றேன்னு நான் கேட்பேன் இல்லே. டேய் நரீஷ், என்ன இருந்தாலும் உன் மூளையே மூளைடா' என்று தனக்குத்தானே புகழ்ந்து கொண்டது. அவ்வளவுதான்! அதற்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது. மூட்டையின் அருகில் நின்று பார்வையை ஓட்டியது. தொலைவில் ஒரு குதிரை வருவது தெரிந்தது. டக்கென்று பாறைக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டது. சிறிது நேரத்தில் குதிரை அவ்விடத்தைக் கடந்து சென்றது.

சிறிது நேரத்தில் இருள் எட்டிப் பார்க்க ஆரம்பித்தது. 'இப்ப ஒரு ஈ காக்கா என் கண்ணிலே படலே... மூட்டைக்குச் சொந்தக்காரன் வந்தாலும் வந்து விடுவான். இனி தாமதிக்கக் கூடாது' என்று மனதிற்குள் எண்ணியபடி



ஒரு மூட்டையைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு சென்றது.

யார் கண்ணிலும் படாமல் அரிசி மூட்டையை ஜிக்குவின் வீட்டிற்குக் கொண்டு வந்தது. அதன் வீட்டுக்



கதவு பூட்டப்பட்டிருந்தது. எனவே வீட்டைச் சுற்றிப் பின் பக்கம் உள்ள வைக்கோல் போருக்குள் அரிசி மூட்டையைப் பத்திரமாக வைத்தது.

'ஜிக்கு! நீ தொலைஞ்சே' என்று

சந்தோஷமாகத் தன் வீட்டிற்குள் நுழைந்து இரவு சமைக்கலாம் என்று அரிசி டப்பாவைக் கையில் எடுத்த போதுதான் அதுக்கு 'டக்' என்று ஞாபகத்திற்கு வந்தது. அரிசி மூட்டை வைத்திருந்த இடத்தி லிருந்து, ஜிக்குவின் வீடு வரை அரிசியைச் சிந்தாமல் வந்தது. 'மத்த வங்க பார்த்து விடுவாங்களோன்னு பயத்திலே சீக்கிரம் வேலை முடி யணும்கிற டென்ஷன்லே முக்கிய மான பாயிண்டைக் கோட்டை விட்டு விட்டேன். சரி...சரி... பரவாயில்லை. இப்ப என்னோட டப்பா அரிசியையே பயன்படுத்திக்கிறேன்' என்று மனதிற் குள் சொல்லிக் கொண்டது. ஒரு துணிப்பைக்குள் அரிசி டப்பாவை வைத்துக் கொண்டது. அரிசி மூட் டைகள் அந்தப் பெரிய அகலமான பாறையில் அப்படியே இருந்தன. அங்கிருந்து ஜிக்குவின் வீட்டுக்குப் பின் பக்கம் இருந்த வைக்கோல் போர் வரை அரிசியைத் தூவிக் கொண்டே வந்தது. தன் டப்பாவில் கால்பாகம்தான் அரிசி இருப்பதைப் பார்த்ததும், அரிசி மூட்டையைப் பிரித்து தன் டப்பா நிறைய போட்டுக் கொண்டு மீண்டும் மூட்டையைச் சரியாகக் கட்டி ஜிக்குவின் வீட்டில் அதே இடத்தில் வைத்து விட்டு, தன் வீட்டை அடைந்து நிம்மதிப் பெரு மூச்சு விட்டது.

மோதிலால் நேரு, நேரு, கமலா நேரு, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி, சஞ்சய் காந்தி என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் பல்வேறு கால கட்டங்களில் இந்தியத் தபால் தலையில் இடம் பெற்றுள்ளனர்.



மறுநாள் காலை.

எதிர்பார்த்தபடி அரிசி மூட்டைக்குச் சொந்தக்கார கரடி, ஜிக்குவின் வீட்டில் தன் அரிசி மூட்டை இருப்பதைக் கண்டுபிடித்து அதனிடம் சண்டைக்கு வந்தது. ஜிக்கு மறுத் தது. கடைசியில் வழக்கு நீதிபதி ஒட்டகச் சிவிங்கியின் முன்பு வந்தது. தன் மகிழ்ச்சியை வெளியே காட்டிக் கொள்ளாது நரீஷ்ூம் அங்கு வந்து அமர்ந்தது. 'ஜிக்கு! நல்லா மாட்டிகிட்டயா?' என்று மனதிற்குள் பாடிக் கொண்டிருந்தது.

கரடி கூற ஆரம்பித்தது:

"என் வீட்டில் நடக்க இருக்கும் கல்யா ணத்திற்காக நானும் என் மனைவியுமாக நெல்லை அரைத்துத் தூக்கிக் கொண்டு வந்தோம். அந்த அகலமான பாறைக்குப் பக்கத்திலே வரும்போது, திடீரென்று என் மனைவிக்கு இடுப்புச் சுளுக்கிக் கொண்டு விட்டது. பாறையின் மீது அரிசி மூட்டைகளை வைத்து விட்டு இருவரும் வைத்தியர் வீட்டிற் குப் போனோம். வைத்தியம் பார்த்துக் கொண்டு அங்கு திரும்பி வரும்போது கொஞ் சம் தாமதமாகிவிட்டது. அங்கு நான் வைத் திருந்த அரிசி மூட்டைகளில் ஓர் அரிசி மூட்டையைக் காணவில்லை. நம்ம காட்டிலே யாரும் திருட மாட்டாங்க, என்ற நம்பிக்கை யிலே அரிசி மூட்டைகளை அப்படியே வைத்து விட்டுப் போனேன். யார் எடுத்திருப்பார்கள் என்று தேடியதில், ஜிக்குதான் எடுத்திருக் கிறது என்று கண்டுபிடித்து விட்டேன்!"

நரீஷ்ுக்கு நாலு கப் ஐஸ் சாப்பிட்ட மாதிரி சந்தோஷம். அப்போது இடையில் குறுக்கிட்ட நீதிபதி, "எந்த ஆதாரத்தை வைத்து கண்டு பிடித்தாய்?" என்று கேட்டது.

"பாறை இருக்கும் இடத்திலிருந்து ஜிக்கு வீட்டின் பின் பக்கம் உள்ள வைக்கோல் போர் வரை அரிசி சிந்தியிருந்தது. வீட்டிற்குள் அரிசி மூட்டை இருந்தால் யார் கண்ணி லாவது பட்டுவிடக் கூடும் என்று, பின்னால் உள்ள வைக்கோல்போருக்குள் ஒளித்து வைத்திருப்பதை நான் கண்டுபிடித்து விட் டேன்" என்றது.

"ஜிக்கு! நீ என்ன சொல்கிறாய்?" நீதிபதி வினவ ஜிக்கு சொல்ல ஆரம்பித்தது: "அரிசி மூட்டையை நான் திருடவில்லை. நம் சிங்கராஜாவின் அரண்மனைத் தோட்டத்தில் நான்கு பெரிய மரங்கள் கீழே விழுந்து விட்டதால், அவற்றை வெட்டி தூக்கி எடுக்கும்

பணியைச் செய்ய நேற்று மதியமே நான் அங்கு சென்று விட்டேன். இன்று காலையில் தான் வீட்டிற்கே வந்தேன். திருட்டு நடந்த போது நான் இந்த ஏரியாவிலேயே இல்லை. சந்தேகம் இருந்தால் அரண்மனைத் தோட்டக்காரரிடம் கேட்டுப் பாருங்கள். இரண்டாவது, பாறை பகுதியிலிருந்து என் வீடு வரை சிந்தியிருக்கும் அரிசி புழுங்கல் அரிசி. ஆனால் மூட்டைக்குள் இருந்ததோ பச்சரிசி. எனக்குப் புழுங்கலரிசி உடம்புக்கு ஒத்துக் கொள்ளாததால், நான் அதை வாங்குவதே கிடையாது. யாரோ வேண்டும் என்றே இப்படி செய்திருக்கிறார்கள். நான் நிரபராதி"– கூறி முடித்தது ஜிக்கு.

"நேற்று ஜிக்கு அரண்மனைக்குப் போன செய்தி எனக்குத் தெரியும். அது வேலை செய்யும் போது நான் தொலைவிலிருந்து பார்த்தேன். அரிசி திருட்டுப் போன சமயத்தில் ஜிக்கு வேறு இடத்தில் வேலை செய்து கொண்டிருந்ததால், அதை நிரபராதி என்று கூறி விடுதலை செய்கிறேன். இந்த வழக்கில் சரியான சாட்சியம் இல்லாததாலும், கரடிக்கு அரிசி மூட்டை திரும்பக் கிடைத்துவிட்டதாலும் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்."

ஒட்டகச் சிவிங்கி தீர்ப்பு வழங்கியது.

நரீஷுக்கு உடம்பு எல்லாம் எரிய ஆரம்பித்தது. அவசரப்பட்டு, தான் செய்த முட்டாள் தனத்தை எண்ணியபடி எரிச்சலோடு தன் வீட்டை அடைந்தது.

ஜிக்குவிற்கு மனசு ஆறவில்லை. நரீஷின் மீது அதற்குச் சந்தேகம் வரவில்லை. நிரபராதியான தன்னை குற்றவாளியாக்கியது யார், என்று தன் நண்பர் ஜிம்மியிடம் மறுநாள் புலம்பியது. ஜிம்மியும் தன் மோப்ப சக்தியின் உதவியினால் நரீஷின் வேலைதான் இது என்று கூறிவிட்டது.

அவ்வளவுதான்! ஜிக்குவிற்கு வந்ததே கோபம். வேகமாக நரீஷின் வீட்டிற்குச் சென்றது.

அப்பொழுது தான் நரீஷ் அடுப்பைப் பற்ற வைத்து உலை வைத்து அரிசியைப் போட அரிசி டப்பாவை எடுத்தது. அந்தச் சமயம் ஜிக்கு உள்ளே வர, "வா ஜிக்கு! அநியாயமா உன் மீது யாரோ பழியைச் சுமத்தி இருக்காங்க. நீ ஒரு குற்றமும் செய்யலை. அதனால தான் உனக்கு பனிஷ்மெண்ட் எதுவும்



துணியினாலான தேசியக் கொடியை 1218ம் ஆண்டு முதன் முதலில் உருவாக்கிய நாடு டென்மார்க்.

– ஆர்.ஆர். பூபதி

கிடைக்கவில்லை" என்று நல்லவன் போல பேசி வரவேற்றது.

"அப்ப குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கணும்னு நீ நினைக்கிறே இல்லே?" ஜிக்கு கேட்டது.

தன்னை யாரும் கவனித்திருக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில், "ஆமாம். அதில் என்ன சந்தேகம்?" என்றது நரீஷ்.

அவ்வளவுதான்! கண் இமைக்கும் நேரத்தில் ஜிக்கு தன் தும்பிக் கையால் நரீஷின் கையில் இருந்த அரிசி டப்பாவைக் கீழே விழச் செய்தது. மேலாகப் பச்சரியும் அடிப் பகுதியில் இருந்து புழுங்கலரிசியும் கீழே சிதறி விழுந்தன.

"கரடி அண்ணாச்சியின் மூட்டையில் இருந்த அதே பச்சரிசி எப்படி உன் வீட்டுப் புழுங்கல் அரிசியோடு கலந்தது?"

என்ன பதில் சொல்வது என்று நரீஷ் யோசித்துக் கொண்டிருக்கையில், ஜிக்கு தன் தும்பிக்கையால் நரீஷை அப்படியே தூக்கி, அதன் வீட்டிற்குப் பின்னால் இருந்த குப்பை மேட்டின் மீது வீசி எறிந்தது. "இனிமே என்கிட்டே வாலாட்டினே... உன்னை சட்னியாக்கிடுவேன்!" என்று கூறியபடி ஜிக்கு செல்வதை குப்பை மேட்டிலிருந்தபடியே எழுந்திருக்கக் கூட முடியாத நரீஷ் பார்த்துக் கொண்டிருந்தது.

பழங்காலந்தொட்டே, பொருளாதார மதிப்புடன் உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்ட தாவரம் மூங்கில். கம்பீரமான தோற்றமுடைய மூங்கில் எப்போதும் பசுமையாகக் காட்சியளிக்கிறது. வலிமையான மூங்கில் வருடம் முழுவதும் வளரும் 'ஒரு விதையிலைத் தாவரம்'. மூங்கிலில் 550 இனங்கள் உண்டு. இவை ஈரப்பதம் மிக்க வெப்ப மண்டலத்தில் மிகுதியாக வளரும். ஆசியாவில் 320 இனங்களும், தென்னமெரிக்காவில் 179 இனங்களும், இந்தியாவில் 130 இனங்களும் காணப்படுகின்றன. மேலும் பர்மா, மலேசியா, சீனா, பிலிப்பைன்ஸ் நாடுகளிலும் கூட மூங்கில் மரங்கள் வளருகின்றன. ஜப்பானில் அழகிய மூங்கில் இனங்களும், ஆப்பிரிக்காவில் சில அரிய வகை இனங்களும் உண்டு. பருவ மழைக் காடுகளில் இவை செழிப்பாகவும், மித வெப்பப் பகுதிகளில் தாழ்வான புதர்ச் செடிகளாகவும், உயரமான இடங்களில் சாதாரண புல்லைப் போலவும் மூங்கில் வளருகிறது. டெண்ட்ரோகலேமஸ் ஜைஜாண்டியாஸ் என்ற வகை மூங்கில் 120 அடி உயரம் வரை வளரும். சில இனங்கள் தரை மீது படர்கொடிகளாகவே காணப்படுகின்றன.

நெல், கோதுமை போல மூங்கிலும் புல் வகைத் தாவரமே! தரைக்கு மேல் நாம் பார்க்கும் கணுக்கள் உள்ள மூங்கிலின் பம்புகள் அவற்றின் கிளைகளே! அவை தரையின் கீழ் உள்ள ரைசோம் என்னும் தண்டுப் பகுதியிலிருந்து கிளைத்து வளரும். மூங்கிலின் உண்மையான தண்டுப் பகுதி தரைக்குள் தான் இருக்கும். ரைசோம்கள் மண்ணின் மேல்பகுதியில் பக்கவேர்களுடன் பரவி வளர்வதால் மண் அரிப்பைத் தடுக்கும். ரைசோமிலிருந்து எழும் குருத்துகள் விரைவாக வளரும். உள்ளே துளையுள்ள மூங்கில் 'பெண் மூங்கில்' என்றும், துளையற்ற மூங்கில் 'ஆண் மூங்கில்' என்றும் சொல்லப்படுகிறது.



எஸ். மோகனா

மூங்கில் இலைக்குப் பெரிய உறை போன்ற இலைக் காம்பும், சிறிய காம்பு அலகும் உண்டு. மூங்கில் பூக்கள் பச்சை நிறத்தில் சிறு கதிர்களாகவும், கலப்பு மஞ்சரிகளாகவும் காணப்படுகின்றன. மூங்கிலின் அதிசயமே அதன் பூக்கள்தான்! ஒரு சிலர்தான் மூங்கில் பூவைப் பார்த்திருப்பார்கள். ஏனெனில் மூங்கில் வருடந்தோறும் பூப்பதில்லை. புல், கோதுமை, நெல் போல இதன் வாழ்நாள் ஒரு வருடத்தில் முடிந்து விடுவதில்லை. மூங்கில் பல ஆண்டுகள் வாழ்ந்தாலும் அதிகம் பூப்பதில்லை. சீனாவிலுள்ள 'ஃபில்லோஸ்

டாசிஸ் பாம்புஸாய்ட்ஸ்' என்ற மூங்கில் 120 வருடம் ஆன பின்பே பூக்கிறது.

ஒரு இனம் பூக்கும் போது, அவ்வினம் வளரும் பகுதி முழுவதும் ஒருங்கே பூக்கின்றன. ஓர் ஆண்டில் மழை குறைவாகவும், வெப்பம் மிகுதியாகவும் இருப்பின் இது பூப்பதைத் தூண்டுகிறது. இப்படி அரிதாய்ப் பூப்பதால், இவை பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினமாகும். பூக்கள் நல்ல மணத்துடன் காணப்படுகின்றன. பூத்து முடித்ததும் காய்த்து, கனியாகும். கனியின் உள்ளிருக்கும் விதையை 'மூங்கில் அரிசி' என்பர். கனி சுவையாய் இருப்பதால் – இவற்றை உண்ண எலி, பறவைகள், காண்டாமிருகம், யானை போன்றவை, இவற்றை நாடி வருகின்றன. மனிதர்களும் கூட மூங்கில் அரிசியை விரும்பி உண்கின்றனர்.

மூங்கில் பூப்பதைப் பற்றி நிறைய கட்டுக் கதைகள் உலவுகின்றன. மூங்கில் பூத்தால் வறட்சியும், சாவும், இயற்கை அழிவும் வரும் என மிசோரம் மாநிலத்தில் வழிவழியாகச் சொல்லப்படுகிறது. அங்கே 1960களில் ஏற்பட்ட பஞ்சமும், இயற்கைப் பேரழிவும் அவ்வாறு மக்களை நினைக்கச் செய்து விட்டன. அதே போல 1943 – 44களில் வங்கத்தில் ஏற்பட்ட பஞ்சமும் இப்படித்தான் மூங்கில் பூத்ததற்குப் பின்பே வந்தது. காரணம் என்னவெனில், மூங்கில் ஏகமாய்ப் பூத்து முடிந்ததும், அதில் நிறைய காய்த்த விதைகளைச் சாப்பிட, எலிகள் ஏராளமாய் விரையும். விருந்துண்ட மகிழ்ச்சியில், பெருகிய எலிகளின் இனம், மூங்கில் விதைகளைத் தின்று தீர்த்த பின், மனிதன் வாழும் ஊருக்குள் நுழைந்து தானியக் களஞ்சியங்களைக் காலி செய்து விடும். இதனால் ஊருக்குள் வறட்சி, பஞ்சம், பட்டினி ஏற்படுகின்றது.


மூங்கில் காடுகளே...


மூங்கில் மனிதனுக்குப் பல வகைகளில் பயன்படுகிறது. இளந் தண்டுகள் சீனா, ஜப்பான் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் பிரபலமான உணவுப் பொருளாகும். தாய்வானில் மூங்கில் தண்டை ஊறுகாய் போட்டு உண்பர். பஞ்சம் ஏற்படும் காலத்தில் ஏழை மக்கள் மூங்கிலரிசியைச் சமைத்து உண்பதும் உண்டு. மூங்கில், தூண், கூரை, பேப்பர், பாய், சாரம், ஏணி, பாலம், நீரோடும் குழாய், வேலி, படகு, தெப்பம், பாய்மரம், நுகத்தடி, அச்சு, கத்தி, உளி போன்றவற்றின் கைப்பிடி, கயிறு கட்டில், கைத்தடி, சிலம்பக்கோல், பல வகைத் தூரிகைகள், புருசுகள், சுங்கான், விசிறி, குடை, விளையாட்டுப் பொருட்கள், காற்றாடி, இசைக் கருவிகள், ஈட்டி, வில், அம்பு, முறம், சல்லடை, பெட்டி, பேழை, மேஜை, நாற்காலி, பெட்டகம் போன்றவை செய்யப் பயன்படுகின்றது. மூங்கில் மருத்துவ சாதனங்களான அக்கு பங்சர் ஊசி, செயற்கைக் கால்கள் போன்றவையும், ஆயுர் வேத மருத்துவத்திலும் பயன்படுகிறது. சில மூங்கில்களில் கணுவிடை நீர் வற்றிப் போவதால், அங்கு சிறு கற்கள் உண்டாகும். அது 'மூங்கில் முத்து' எனப்படும். இதில் சிலிக்கா, இரும்பு, பொட்டாசியம், அலுமினியம் போன்றவை உண்டு. யானை, பாண்டாவின் உணவு மூங்கில் இலைகளே! மூங்கிலிலிருந்து ரேயான் துணியும் கூட தயாரிக்கப் படுகின்றது.

யார் மருமகள்?

பா. கவிதா, புதுடெல்லி

படம்: முத்து





உங்கள் மூவருக்கும் ஆளுக்கு ஒரு துணி தருகிறேன். அதில் யார் மிகச் சிறப்பாகத் தையல் போடுகிறார்களோ அவளே என் மருமகள்.
நன்றி அரசி. வருகிறேன்.
இரண்டு நாட்கள் கழித்து –
அரசியாரே வணக்கம். இதோ என் துணி
ஆஹா! என்ன அழகு!
அடுத்தவள் –
இதோ என்னுடையதைப் பாருங்கள்.
அற்புதம்!
என்னம்மா நீ வெறும் துணியைத் தர்றே?
!
இரண்டு நாட்களாக என் அப்பாவுக்கு உடல்நலம் சரியில்லை. அக்காக்கள் இருவரும் தையலில் மூழ்கிவிட்டனர். எனவே நான்தான் எல்லா வேலைகளையும் செய்தேன். அதனால்தான்...
நீயே என் மருமகள். உன்னுடைய பொறுப்புணர்ச்சியை மதிக்கிறேன்.
அருமையான தேர்வு!



தேனாகப் பாயும் குறுவட்டு!

குழந்தைகளுக்கான கார்ட்டூன்களும் மழலையர் பாடல்களும் (நர்சரி ரைம்ஸ்) கொண்ட குறு வட்டு என்கிற சி.டி.களைக் காணும் போதெல்லாம் இவை போல் தமிழில் வரக் கூடிய காலமும் வருமா என்று மனதிற்குள் ஏங்கிய நாள்கள் எத்தனையோ. பெருஞ்செலவு பிடிக்கக்கூடிய முயற்சி என்பதோடு இதற்கு வரவேற்பு இருக்குமா என்ற பயமுமே பலரை இதில் ஈடுபடத் தயங்க வைத்தது. இப்பொழுது இந்த ஏக்கம் மறைந்து விட்டது. குழந்தைகளுக்கான முதல் தமிழ் சி.டி. வந்தேவிட்டது. இதைச் சாதித்திருப்பவர்கள் கவிஞர் செல்ல கணபதியும் பழனியப்பா பிரதர்ஸ் செ.மெ. பழனியப்பரும்தான்.

'பாப்பா! பாட்டுப் பாடுவோம்' என்ற பெயரில் வெளியாகியுள்ள இந்தக் குறுவட்டில் குழந்தைகளைக் கட்டிப் போட வைக்கும் இசையும் கார்ட்டூனும் இணைந்த தேன் சிந்தும் பாடல்கள் உள்ளன. காட்சி வேண்டாம் என்றால் கேட்டு மகிழவும் விளையாடி மகிழவும்கூட வசதி இருக்கிறது. ''தமிழில் குழந்தைகளுக்காக இன்னுமா ஒரு பாடல் சி.டி. கூட இல்லை?'' என்று மற்ற மொழியினர் கேட்கும்போதெல்லாம் வெட்கப்பட்ட நிலை இப்பொழுது மாறிவிட்டது.

பள்ளி விழாக்களிலும் சிறுவர் விழாக்களிலும் ஆங்கில மழலைப் பாடல் சி.டி.களை மட்டுமே கேட்டு வந்தவர்கள் இனி பாப்பா பாட்டுப் பாடுவோம் சி.டி.யையும் கேட்டு மகிழலாம். பிறந்த நாளுக்கும் பண்டிகைகளுக்கும் பள்ளி விழாக்களுக்கும் அயல் நாட்டிலுள்ள உறவினர்களுக்கும் வழங்க ஏற்ற பரிசு இது. இதைப் பாடல்களின் சந்தத்திற்காக ஒரு முறை, இசைக்காக ஒரு முறை, கண்களுக்கு விருந்தாக வரும் கார்ட்டூனுக்காக ஒரு முறை, விளையாட்டுகளுக்காக ஒரு முறை என்று பல முறை பார்த்துக் கேட்டு மகிழலாம்.

'பாப்பா! பாட்டுப் பாடுவோம்' குறுவட்டை வெளியிட்டுள்ள செல்ல கணபதியும் பழனியப்பரும் சிறுவர் இலக்கிய வரலாற்றில் குறுவட்டு பிரிவைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இந்தத் துணிச்சலான அரிய முயற்சியை வெற்றி பெற வைப்போம்.

- ரே

பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.



புதிர் பக்கம்

I ஒரு தோப்பில் மாமரங்களும் தென்னை மரங்களும், வாழை மரங்களும் இருந்தன. மா மரத்தின் எண்ணிக்கையில் பாதி தென்னை மரமும், தென்னை மரத்தின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகம் வாழை மரங்களும் இருந்தன. மாமரங்களின் எண்ணிக்கையையும், தென்னை மரங்களின் எண்ணிக்கையையும், வாழை மரங்களின் எண்ணிக்கையையும் பெருக்கினால் கிடைக்கும் எண் 18000.

அப்படியெனில் அந்தத் தோப்பில் தனித்தனியே எத்தனை மரங்கள் இருந்தன என்று சொல்லுங்களேன்!

- குட்டி பிரசன்னா,
காந்தி கிராமம், கரூர்.

II என் தம்பியிடம் வயதென்ன என்று என் மாமா கேட்டார். அதற்கு அவன், "என் வயதுடன் எட்டைக் கூட்டி வரும் விடையை ஒன்பதால் பெருக்கி மூன்றால் வகுக்கவும். அதிலிருந்து பதினேழைக் கழித்து நாலால் வகுக்க வரும் விடைதான் என் வயது" என்றான். அப்படியானால் என் தம்பியின் வயதென்ன?

- நெ. இராமன், சென்னை.

III செல்வந்தர் ஒருவர் தன் பிறந்த நாளன்று ஏழை மக்களுக்கு வழங்குவதற்காக 100 லிட்டர் பாலுடன் வந்தார். பெரியவருக்கு ஆளுக்கு 3 லிட்டர் பாலும், இளைஞர்களுக்கு 2 லிட்டர் பாலும், சிறுவர்களுக்கு அரை லிட்டர் பாலும் வழங்கினார்.

சரியாக 100 பேர் அவரிடம் பால் வாங்கியவுடன் 100 லிட்டர் பாலும் தீர்ந்து போனது. அப்படியெனில் எத்தனை பெரியவர்கள், இளைஞர்கள், குழந்தைகள் அவரிடம் பால் வாங்கியிருப்பார்கள்?

- எம். வினோத்,
சங்கரன்கோவில்.

IV(a) ஒரு பெரிய பானையில் முப்பது லிட்டர் தண்ணீர் உள்ளது. தண்ணீரின் அளவு குறைய வேண்டும். அந்தப் பானைக்குள் என்ன போட்டால் தண்ணீரின் அளவு குறையும்?

IV(b) ஒரு முட்டை நன்றாக வேக ஏழு நிமிடம் ஆகிறது. ஐந்து முட்டை வேக எவ்வளவு நேரம் ஆகும்?

- என். ஜரினா பானு, திருபட்டினம்.

V கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஒன்பது கேள்விகளுக்கும் விடைகள் 'அகர' வரிசைப்படி அமைந்திருக்கும். எங்கே விடைகளைச் சுலபமாகக் காணுங்கள் பார்க்கலாம்!

1. தனது வாழ்நாளில் ஒரு முறைகூட விமானத்தில் பயணம் செய்யாத தலைவர் ____
2. 'அமெரிக்கக் காந்தி' என்ற புகழுக்குரியவர் ____
3. பால் பாய்ண்ட் பேனாவைக் கண்டுபிடித்தவர் ____
4. மதுரையின் பெண் தெய்வம் ____
5. ஹிட்லரின் சம காலத்தில் இத்தாலி நாட்டை ஆண்டவர் ____
6. வாழைப்பழத்தின் விஞ்ஞானப் பெயர் ____
7. ஆங்கில வழி கல்விக் கொள்கையைக் கொண்டு வந்தவர் ____
8. இந்தியாவில் கால்பந்து ஆட்டத்துக்குப் பெயர் போன மாநிலம் ____

9. காச நோய் உண்டாகக் காரணமான கிருமி____

ஜோ. இளந்தென்றல்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
முன்னாவல் கோட்டை,
திருவாரூர் மாவட்டம்.

VI எங்கள் வீட்டுத் தோட்டத்தில் உள்ள ரோஜாச் செடிகளில் அநேக மலர்கள் மலர்ந்திருந்தன. நான் அவற்றில் சில பூக்களை முதல் நாள் பறித்துக் கொண்டு வந்துவிட்டேன். செடிகளில் சில பூக்கள் மீதி இருந்தன. மறுநாள் சென்று பார்த்த போது நேற்று மீதம் இருந்ததைப் போல ஒரு மடங்கு அதிகமாக மலர்ந்திருந்தன. அன்றும் முன்பு பறித்த அளவே பறித்துக் கொண்டு வந்து விட்டேன். மூன்றாம் நாள் பறிக்கச் சென்ற பொழுதும் நேற்று மீதம் இருந்ததைப் போல் ஒரு மடங்கு அதிகமாக மலர்ந்திருந்தது. அன்றும் அதே அளவு பூக்களைப் பறித்துக் கொண்டு வந்தேன். இப்பொழுது செடிகளில் இலைகள்தாம் மீதம் என்றால், முதலில் இருந்த பூக்கள், நான் ஒவ்வொரு தடவையும் பறித்த பூக்கள் எத்தனை? **- தேனி முருகேசன்**

புதிர் விடைகள்

I மாமரங்கள் - 60,
தென்னை மரங்கள் - 30,
வாழை மரங்கள் - 10.
II விடை: தம்பியின் வயது 7
III விடை: பெரியவர்கள் - 5 பேர்
இளைஞர்கள் - 25 பேர்
குழந்தைகள் - 70 பேர்


5 x 3	=	15
25 x 2	=	50
70 x ½	=	35
100		100

IV(a) ஓட்டை போட வேண்டும்!
IV(b) அதே ஏழு நிமிடங்கள்.
V 1. மகாத்மா காந்தி
2. மார்டின் லூதர் கிங்
3. மில்டன் ரெனால்டு
4. மீனாட்சி
5. முசோலினி
6. மூசா செபியண்டம்
7. மெக்காலே பிரபு
8. மேற்கு வங்காளம்
9. மைக்ரோ பாக்டீரியா
VI செடியில் முதலில் இருந்த பூக்கள் 21.
ஒவ்வொரு தடவையும் பறித்த பூக்கள் 12.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 பா	ர	2 தி	யா	ர்	■	3 வ	ங்	4 கி
ர்	■	யா	■	த	■	ர	■	ரா
வ	■	க	■	ந்	■	ம்	■	ம
5 தி	ட	ம்	■	6 லா	■	7 பு	ற	ம்
■	■	■	■	■	■	■	■	■
8 கு	ட்	டி	■	9 க	■	10 கா	ணி	ர்
ங்	■	ய	■	ம்	■	ந்	■	த
ழ	■	தி	■	ப	■	தா	■	ர
11 கி	ரு	12 மி	■	ம்	க	ரி	க	13 நா



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

பெரிய வார்த்தை சொல்

ஜோக்ஸ் பக்கம்




"ஆணையிடுங்கள் மன்னா..."

"ஆணையிடுங்கள் என்று எனக்கே ஆணையிடுகிறாயா? உனக்குத் தண்டனை நிச்சயம்."

"என்னங்க இது, சுவர்ல போய் பாடி ஸ்பிரே அடிக்கிறீங்க?"

"நான் வியர்வை சிந்தி கட்டின வீடாச்சே இது!"

- எஸ். முத்து காளீஷ்வரன், திருச்சி





"ஒரு பெரிய வார்த்தை சொல்லு."

"எலாஸ்டிக்"

"இது சின்ன வார்த்தையில்ல..."

"இதை எவ்வளவு பெரிசா வேணும்னாலும் இழுத்துக்கலாம் சார்..!"

- ஆதித்தனார், நெல்லை


"யாருய்யா! டிக்கெட்... டிக்கெட்!"

"அப்படி யாரும் இங்கே இல்லையே!"

- என். ஜரினா பானு, திருபட்டினம்.



ஆர். பொன்னம்மாள்



வெந்நீரும் சுடவில்லை!

கர்நாடகத்தில் ராய்ச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த மொசரகாலு என்ற ஊரில் மொனாராயா _ வெங்கம்மா தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாகப் பிறந்தவர் பாகண்ணா. அவருக்குப் பின் தாசப்பா, சீனப்பா, ரங்கப்பா என்று மூன்று பிள்ளைகள். ரங்கப்பா கைக்குழந்தையாயிருக்கும் போது மொனாராயா காலமானார்.

உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டு சொத்து ஏதும் இல்லாத வெங்கம்மா சங்கரபுரா என்ற ஊருக்கு வந்தாள்.


ஊர் எல்லையில் ஓர் ஆஞ்சநேயர் கோவில். கோவிலைச் சுற்றி நிறைய இடம் காடாக மண்டிக்கிடந்தது. அதையெல்லாம் சுத்தம் செய்தாள். ஊர்ப் பெரியவர்களின் அனுமதியோடு கோவிலுக்குப் பின்புறம் தங்கினாள். மழை பெய்தால் கோவில் வளாகத்து மூலையில் ஒண்டிக் கொள்வாள்.

பஜனை செய்து உஞ்சவிருத்தி எடுத்து, கிடைக்கும் அரிசியை மூன்று கற்கள் வைத்து சுள்ளி செத்தைகளை எரியவிட்டு, சமைத்து அனுமனுக்கு நிவேதித்து, உப்புப் போட்டு பிசைந்து குழந்தைகளுக்குக் கொடுத்து தானும் உண்பாள்.

வெங்கம்மாவுக்குச் சமையலும், பட்சணங்களும் சுவையாகச் செய்யத் தெரியும். முடிந்த ஒத்தாசைகளை ஊராருக்குச் செய்ய, அவர்கள் மீதமிருந்த சாப்பாட்டை அவளுக்குக் கொடுத்தனர். பாகண்ணாவும் ஏவின வேலைகளைச் செய்து நற்பெயர் சம்பாதித்தான்.

வெங்கம்மா வந்த பிறகு கோவிலும் சுத்தமாக இருந்ததென்று ஊரார் பேசிக் கொண்டனர். பெருக்கி, மெழுகி, கோலமிட்டு அர்ச்சகர் தரும் பிரசாதங்களை ஏற்பாள்.

ஒரு நாள் மிராசுதார் ஒருவர் அக்கோவிலுக்கு வந்தார். அனுமார்



ஹார்டி என்ற இனக் கரப்பான் பூச்சிதான் காலத்தால் மூத்தது. சுமார் 280 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இவை காணப்படுகின்றன. இந்த இனத்தில் 35000 சிற்றினங்கள் உள்ளன.

— ரெ. இராமன்

அவருக்கு அனுக்கிரகம் புரிந்ததாகக் கூறி, அபிஷேகம் செய்து வெண்ணைக் காப்பு சாற்றினார்.

வெங்கம்மாவைப் பார்த்து இரக்கம் கொண்டார். கோவிலுக்கு அருகிலிருந்த நிலத்தை உழுது பயிரிட்டுக் கொள்ளும்படி கூறிச் சென்றார்.

ஊரார் ஒத்தாசையோடு பயிரிட்டாள். ஒரு விவசாயி ஏரும் மாடும் இனாமாகத் தந்தான். பாகண்ணாவும், தாசப்பாவும் நிலத்தை உழுதனர். வெங்கம்மாவும், சீனப்பாவும் களையெடுத்தனர். நல்ல விளைச்சல். நல்ல இதயங்களின் உதவியோடு அறுவடை முடித்து கடனுக்கு அளித்தது போக, மீதி மூன்று மூட்டைகளைக் கோவில் மூலையில் வைத்தனர்.

பொறாமை கொண்ட சில போக்கிரிகள் கிராமக் கணக்குப் பிள்ளையிடம், "அனுமாரை சக்தியில்லாதவளாக்கி விட்டாள் இந்த வெங்கம்மா! அவளுடைய கடைசிக் குழந்தை நேற்று பிரகாரத்திலேயே வாந்தி எடுத்து விட்டான். கேள்விமுறை இல்லாமல் போய்விட்டதே இந்தச் சங்கரபுரா! மூட்டை மூட்டையாய் விளைஞ்சிருக்கே! வரி கொடுக்க வேண்டாமா? நாளைக்கு தாசில்தார் வந்து கொக்கி போட்டால் என்ன பண்ணுவீர்கள்?" என்று தூபம் போட்டனர்.

இவ்வளவு போதாதா? கணக்குப் பிள்ளை ஆட்களோடு வந்து வரி, அபராதம் என்ற பெயரில் மூன்று மூட்டைகளையும் எடுத்துக் கொண்டான். இனிமேல் கோவிலில் தங்கக் கூடாதென்று தடை உத்தரவும் போட்டான்.

'வெங்கம்மாவுக்காக நியாயம் சொல்லப் போக கணக்குப் பிள்ளையின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும்' என்று நல்லவர்கள் கூட அஞ்சி பேசாதிருந்தனர்.

வெங்கம்மா கதறி அழுதாள்.

பாகண்ணா, "அழாதே அம்மா! இரக்கமில்லாத இவருக்கு வாரிசில்லாமல் போகும்! நெஞ்சில் ஈரமில்லாத இவர் வீட்டுக் கிணறும் வற்றிவிடும்" என்றான்.

அவ்வூர் ஆசிரியர் தன் வீட்டில் தங்க இடமும் கொடுத்து, பிள்ளைகளுக்குப் படிப்பும் சொல்லிக் கொடுத்தார். வெங்கம்மா அவர்கள் வீட்டு வேலைகளைச் செய்தாள். அதோடு ஊரில் சில நல்லவர்கள் இல்லத்திலும் வேலை கிடைத்தது.

வெங்கம்மா வேலை பார்த்த ஒரு பணக்காரர் வீட்டில் உபநயனம் நடந்தது. முறுக்கு, பருப்புத் தேங்காய், லட்டு என்று பட்சணங்கள் செய்து கொடுத்தாள் வெங்கம்மா. பணக்காரர், பாகண்ணாவுக்கும் சேர்த்து பூணூல் போட்டு வைத்தார். அப்போது சாஸ்திரிகளிடம் ஒவ்வொரு மந்திரத்துக்கும் விளக்கம் கேட்டு, காயத்ரி மந்திரத்தின் மகிமையைத் தெரிந்து கொண்டான்.

வேதத்தில் கூறியுள்ள எண்ணிக்கைப்படி மூன்று வேளையும் சந்தியா வந்தனம் செய்தான். குளக்கரையில் உள்ள பெரிய ஆலமரத்தடியில், மணிக் கணக்காய் காயத்ரி ஜெபித்தபடி தியானத்தில் ஆழ்ந்து விடுவான்.

"பாகண்ணா! உட்கார்ந்தே தூங்க

றாண்டா!" என்று கிண்டல் செய்வார்கள் போக்கிரிகள்.

"பாகண்ணா! உனக்கு உங்கம்மா உப்பு போட்டே சாப்பாடு கொடுக்கறதில்லையா?" என்பான் ஒருவன்.


"உடம்புக்கு மட்டும் சொரணையில்லையா? மூளைக்கும் சேர்த்தா?" என்பான் வேறொருவன்! காயத்ரி தியானத்தில் இருக்கும் பாகண்ணாவுக்கு எதுவுமே கேட்காது.

ஒரு நாள் மூன்று கற்களைக் கொண்டு தீமூட்டி, ஒருபானை நிறைய நீரை நிரப்பி கொதிக்க வைத்தனர். பாகண்ணா வெந்நீர் சூட்டில் எப்படி குதிப்பான், என்று கற்பனை செய்து மகிழ்ந்தனர்.

"ஊர் சாப்பாட்டிலேயே இப்படி வளர்ந்திருக்கியே! சொந்த சாப்பாடுன்னா யானை மாதிரி ஊதிடுவியா?" என்றபடி துணியைப் பிடித்துக் கொண்டு வெந்நீரை ஊற்றினர்.

பாகண்ணாவிடம் எந்த அசைவுமில்லை! அருவியில் குளித்தது போலிருந்தான். ஆனால் வெந்நீரை ஊற்றியவர்கள் 'ஐயோ, அம்மா' என்று அலறி பூமியில் புரண்டு துடித்தனர். உடலெல்லாம் சிவந்து குண்டு குண்டாய் கொப்புளங்கள்!

அனைவரும் நடுங்கி பாகண்ணாவின் கால்களில் விழுந்தனர்! "பாகண்ணா! எங்களை மன்னித்துக் காப்பாற்று. கணக்குப் பிள்



ளைக்கு உன் சாபப்படி வாரிசில்லை! ஊரிலுள்ள அத்தனை கிணறு களிலும் நீர் நிரம்பி இருக்க, அவர் வீட்டுக் கிணற்றில் கள்ளிச் செடிகள் முளைத்து, பாம்புகள் ஊர்கின்றன! இதையெல்லாம் கண் கூடாகப் பார்த்தும் அறிவில்லாமல் உனக்குக் கெடுதல் செய்து விட்டோம். அபயம் கொடு" என வேண்டினர்.

"நாராயணரை நெஞ்சில் நிறுத்தி தியானிக்கையில் உங்கள் செய்கை நாராயணரை நரசிம்மராக்கிவிட்டது. பாற்கடல் நாதா! இவர்களைக் காப்பாற்று" என்று பிரார்த்திக்க, துஷ்டர்களின் உடம்பிலுள்ள கொப்புளங்கள் மறைந்தன.

ஒரு நாள் தியானத்தில் யாரோ நாக்கை நீட்டச் சொன்னார்கள். நீட்டினார். கண் இமைகளை என்ன முயன்றும் திறக்க முடியவில்லை! யாரோ நாக்கில் எழுதுவது தெரிந்தது. எழுதுவது நின்றதும் கண் விழித்தார். எழுதியது நாராயணனே என உணர்ந்தார்.

சந்தங்களோடு பக்திப் பாடல்கள் கோர்வையாய் வந்தன. எதிர்காலத்தைக் கணித்துக் கூறும் சக்தி வந்தது. உத்தனூர் சென்று ஜோதிடம் கூறி குடும்பத்தைக் காப்பாற்றினார். தம்பி தாசப்பா பெரியவனானதும் அவனிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, ஆதோணி சென்று ஸ்ரீ விஜயதாசரைச் சந்தித்து அவருடைய சீடரானார். ஸ்ரீ விஜய தாசர் பாகண்ணாவுக்கு 'கோபால விட்டல்' என்று தீட்சா நாமம் சூட்டினார்.

இதன் பிறகு பல அற்புதங்களை நிகழ்த்தியும், பாடல்கள் மூலம் இறையுணர்வு வளர்த்தும் வந்தார். ஒருநாள் தியானத்திலேயே சமாதி அடைந்தார் கோபாலதாசர்.

'பார்பி'

உலகப் புகழ்பெற்ற 'பார்பி' பொம்மைகளை உருவாக்கிய ரூத் ஹாண்ட்லர் என்ற பெண்மணி சமீபத்தில் தம்முடைய 85-வது வயதில் உடல் நலக் குறைவினால் காலமானார்.



1959ஆம் ஆண்டு தன்னுடைய மகள் பார்பராவுக்காக உருவாக்கிய பொம்மைக்கு 'பார்பி' என்று பெயரிட்ட இவர், தான் பங்குதாரராக இருந்த 'மாட்டெல்டாய் கம்பெனி' மூலமாக இதை விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார். சில ஆண்டுகளுக்குள் அமெரிக்கக் குழந்தைகளிடையே தேவதை போல், 'பார்பி' ஒன்றிணைந்துவிட, பார்பி பொம்மை இல்லாத குழந்தைகளைப் பார்ப்பதே அரிதாகிவிட்டது.

உண்மையான மனித உருவமாக இருந்தால் கூட இத்தனை அழகுடன் இருந்திருக்க முடியுமா என்று உலகம் முழுவதும் உள்ள ஓவியர்கள் உள்பட பலரையும் வியக்க வைத்தது இந்த 'பார்பி' பொம்மை. 1976ஆம் ஆண்டு அமெரிக்காவில், எதிர்கால சரித்திர ஆய்வாளருக்கு உதவ பூமிக்கடியில் புதைக்கப்பட்ட காலப் பெட்டகத்தில் கூட இடம் பெற்று விட்டது.

இதுவரை 150க்கும் மேற்பட்ட நாடுகளில் கோடி கணக்கில் பார்பி பொம்மைகள் விற்பனையாகியுள்ளன. 1994ஆம் ஆண்டு ரூத் ஹாண்ட்லர் எழுதிய தம்முடைய சுயசரிதையில் கூட பார்பியைப் பற்றி எழுதியிருக்கிறார். பார்பிக்கு உறவு முறை பொம்மைகளும் உண்டு. அவளுடைய பாய் பிரண்டு பொம்மையின் பெயர் கென், சகோதரி ஸ்கிப்பர், நண்பர்கள் மிட்ஜ் மற்றும் கிரிஸ்டி!

— அ. குமார்

உங்களிடமிருந்து...

✉ நான் கோகுலம் இதழைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக இடைவிடாமல் வாசித்து வருகிறேன். ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு விதத்தில் நன்றாக இருக்கிறது. அதிலும் பிப்ரவரி, மார்ச் இதழ்கள் மிகவும் அருமையாக இருந்தன. நான் நிறைய படைப்புகளை கோகுலத்துக்கு எழுதி அனுப்பியுள்ளேன். இதுவரை ஒன்றுகூட வெளிவரவில்லை. இனியாவது வெளியிடுவீர்களா?

- கி. ஜனனி, ஒன்பதாம் வகுப்பு, தஞ்சாவூர்.

அன்புள்ள ஜனனி,

உங்களின் வருத்தம் புரிகிறது. கோகுலம் முற்றிலும் உங்களுக்கே உங்களுக்கான பத்திரிகை. உங்களைப் போன்ற மாணவ, மாணவியர் தினமும் நிறைய எழுதி அனுப்புகிறார்கள். நம்முடையது மாத இதழ். சுவையான படைப்புகள் சற்றுக் கால தாமதம் ஆனாலும்கூட நிச்சயம் வெளிவரும். கவலைப் படாமல் தொடர்ந்து எழுதுங்கள். வாழ்த்துகள்!

- ஆர்



✉ நான் மிகவும் மதிக்கும் நமது குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களைப் பற்றி கோகுலத்தில் வந்த கட்டுரை அற்புதம்! கூடு விழுந்தது ஏன்?, மந்திர மாமரம் படக்கதைகளும் நன்றாக இருந்தன.

- என். வெற்றிச்செல்வி, ஒன்பதாம் வகுப்பு,
அ.உ.நி.பெ.பள்ளி, ஆண்டிபட்டி.

✉ மதுரை மாவட்ட ஸ்பெஷல், சம்திங் ஸ்பெஷலாக இருந்தது. வண்ணப்படங்கள் கண்களைக் கவர்ந்தன. போஸ்டர் சூப்பர்!

- ஆர். தியானேஸ்வரன், பன்னிரண்டாம் வகுப்பு,
அ.உ.நி.பள்ளி, திருவிடைமருதூர்.

✉ ஹார்ன்பில்லைப் பற்றிய செய்திகள் பயனுள்ளதாக இருந்தன. இந்தப் பறவையை நேரில் பார்க்க மிகவும் ஆவலாக உள்ளது. எவரையும் மதிக்க வேண்டும் பாடல் நல்ல கருத்துகளை வலியுறுத்தியுள்ளது.

- ஜி. கனகராஜ்,
எட்டாம் வகுப்பு,
அரசு உ.நி. பள்ளி,
தூத்துக்குடி.

✉ முந்திரிக் கொட்டை முருகேசன் தலைப்பைப் பார்த்ததும் படிக்கத் தூண்டியது. இப்படி நிறைய முருகேசன்கள் இருப்பது உண்மை தான். நெட்பிட்ஸ், மசாலா பாப்கார்ன் பல செய்திகளை எங்களுக்குத் தெரியப்படுத்துகின்றன.

- எல். சரண்யா, வேலூர்.


✉ அட்டைப்படம் கலக்கல். பிப்ரவரி அட்டையும் மிக நன்றாக இருந்தது. மீனாட்சிக்குத் திருஷ்டி சுற்றிப் போடலாம்.

- கே. புவனாதேவி,
மன்னார்குடி.

சுழல் கோப்பை நினைவு இருக்கிறதா?

ஒவ்வோர் ஆண்டும் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையைப் பெறப் போகும் பள்ளி, உங்கள் பள்ளியாகவும் இருக்கலாம். படைப்புகளை அனுப்புங்கள்; போட்டியில் குதியுங்கள்.

அ.குமார்



ஏழு முட்டாள்கள்!

மேயோ என்ற நகரத்தில் மெக் ஆன்ட்ரூ என்ற மிகப் பெரிய பணக்காரர் வாழ்ந்து வந்தார். ஆனால் அவருக்குப் பிறந்த ஏழு மகன்களுமே முட்டாள் கள்.

ஆளுக்கொரு வீடு அமைத்துக் கொடுத்து, நிலங்களையும் கால்நடை களையும் பிரித்துக் கொடுத்தார் மெக் ஆன்ட்ரூ. ஏழு சகோதரர்களுக்கும் ஒரே மகிழ்ச்சி.

ஒரு நாள் விடியற்காலை அயர்லாந்தில் உள்ள கில்லல்லா என்ற ஊரில் நடைபெறும் திருவிழாவுக்குப் போவதென்று ஏழு சகோதரர்களும் தீர்மானித் தனர். ஒவ்வொருவரும் தலா நன்கு கொழுத்த மூன்று பசுக்களை ஓட்டிக் கொண்டு ஒன்றாகக் கிளம்பினர்.

இவர்களுடைய வயல்களையொட்டி வசித்து வந்த சாம்சன் என்ற புத்திசாலி விவசாயிக்கு, நீண்ட காலமாகவே இவர்களுடைய பசுமையான வயல்கள், கால் நடைகள் மீது ஒரு கண் இருந்து வந்தது. ஏழு சகோதரர் களும் ஒன்று சேர்ந்து இருபத்தோரு பசுக்களை ஓட்டிச் செல்வதைப் பார்த்த அவன், "இந்த விடியற்காலையில் எல்லோருமாக சேர்ந்து எங்கே போகிறீர் கள்?" என்று கேட்டான்.

"எங்களுடைய தந்தை கொடுத்த இந்தப் பசுக்களைத் திருவிழாவில் விற்பதற்காகப் போய்க் கொண்டிருக்கிறோம்" என்று அவர்களில் மூத்த வனான ஜான் சொன்னான். "துஷ்ட தேவதைகளின் கண்பட்ட இந்தப் பசுக்களையா விற்கப் போகிறீர்கள்? என்னால் நம்பவே முடியவில்லையே! இத்தனை காலமாக உங்கள் அம்மாவின் ஆவிதான் உங்களைக் காப்பாற்றி வந்திருக்கிறது. இப்படியொரு காரியத்தைச் செய்வதன் மூலம் கொலைப் பழியை வேறு சுமக்கப் போகிறீர்களா?" என்று கேட்டான் சாம்சன். இதைக் கேட்டதும் மூத்த சகோதரர்கள் மூவரும் வெலவெலத்துப் போனார்கள். கடைசி நால்வரும் ஓவென்று கூச்சலிட்டு அழத் தொடங்கினார்கள்.

ஜரிஷ் நாட்டு நாடோடிக் கதை

"சாம்சன், உண்மையிலேயே இவற்றின் மீது துஷ்ட தேவதைகள் கண்பட்டிருப்பது எங்களுக்குத் தெரியாது. உனக்கு எப்படி தெரிந்தது? இன்றைய தினம் மிகவும் துரதிருஷ்டம் பிடித்த நாளாகிவிட்டதே?" என்று சொன்னான் ஜான்.

''எப்படி கண்டுபிடித்தேன் என்று தானே கேட்கிறாய்? ஜூடி என்கிற சூனியக்காரக் கிழவியொருத்தி தினமும் உங்கள் வயல்களுக்கருகில் வந்து நின்று பெருங்குரலில் சிரித்தபடி அண்டங்காக்கைகளை ஏவி விடுவாள். இதைப் பார்க்கும் போதெல்லாம் உங்களுடைய அப்பா அவளைக் கெட்ட வார்த்தைகளால் திட்டுவார். அதை அவள் மறக்கவே இல்லை. இப்போது இந்தப் பசுக்களுக்கு அதன் தோலைத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் பணம் கொடுக்க மாட்டார்கள்" என்று சொன்னான் சாம்சன்.

''அய்யய்யோ, அப்படியா?'' என்று ஏழு பேரும் பெருங்குரலில் சத்தமிட்டு அழுதனர்.

"முதலில் சத்தம் போடுவதை நிறுத்துங்கள். நான் உங்களுடைய உண்மையான தோழன் என்பதால், உங்கள் கஷ்டங்களை ஏற்றுக் கொள்கிறேன். உங்களிடமிருந்து இந்தப் பசுக்களை வாங்கிக் கொள்கிறேன். ஆனால் அதன் தோலுக்கு மட்டுமே விலை கொடுப்பேன். அதன் தோலை மட்டும் பயன்படுத்துவதால் பாவம் ஏதுமில்லை. ஒரு மாட்டின் தோலுக்கு ஒரு ஷில்லிங்."

இதைவிட நல்ல வாய்ப்பு கிடைக்காதென்று கருதிய அந்த ஏழுபேரும் சாம்சனின் பரந்த உள்ளத்தைப் பாராட்டியதோடு, பசுக்களைக் கொண்டு சேர்த்து விட்டுப் பணத்தை வாங்கிக் கொண்டு திருவிழாவுக்குச் சென்றனர்.

நாட்கள் நகர்ந்தன. வயதான மெக் ஆன்ட்ரு உடல் நலமின்றி இறந்து போனார்.

ஒருநாள் தன்னைப் பெரும் செல்வந்தனாகக் காட்டிக் கொண்ட ஜான், பகட்டான உடையணிந்து பை நிறைய தங்க நாணயங்களுடன் கடைவீதிக்குச் சென்றான்.

கடைக்கு வெளியே வரும்போது தங்க நிறத்தில் பந்து போன்ற உருண்டைகள் கட்டித் தொங்க விடப்பட்டிருப்பதைக் கண்டான். அதைப் பற்றிக் கடைக்காரனிடம் விசாரித்தான் ஜான்.

அழகுக்காகத் தொங்கவிடப்பட்டிருந்த உருண்டைகளைப் பற்றி அவன் விசாரிக்கும் தோரணையிலிருந்தே சரியான முட்டாள் என்பதை உணர்ந்து கொண்ட கடைக்காரன், "இது பற்றி உனக்குத் தெரியாதா? இதுதான் குதிரை முட்டை" என்று சொன்னான்.

''அப்படியா? இதற்குள்ளிருந்துதான் குதிரைக்குட்டி வெளிவருகிறதா?"

''ஆமாம். இத்தனை புத்திசாலியாக இருந்து கொண்டு அசட்டுத்தனமான கேள்விகளைக் கேட்கிறாயே?"

"இதை எனக்கு விற்கிறாயா?"

"இத்தனை நாட்களாக சூரிய ஒளி படும்படி இவற்றைத் தொங்கவிட்டது விற்பதற்காக



அல்ல. குட்டிகள் வெளியே வரும் சமயமாகி விட்டது. குட்டிகள் ஒவ்வொன்றையும் இருபது டாலருக்குக் குறையாமல் விற்க முடியுமே!" என்றான் கடைக்காரன்.

"நான் இருபது டாலர் கொடுக்கிறேன்."

தன்னிடமிருந்த இருபது டாலரைக் கொடுத்து அவனிடமிருந்து ஒரு உருண்டையை வாங்கிக் கொண்டான் ஜான்.

சந்தோஷத்துடன் வீட்டுக்குப் போனவன், அருகில் மலையுச்சியில் இருந்த தன்னுடைய சகோதரர்களைச் சந்தித்தான்.

"உலகத்திலேயே மிக அபூர்வமானது. இதுதான் – குதிரை முட்டை" என்று பெருமையுடன் சொன்னான் ஜான்.


ஒவ்வொருவர் கையாக மாறிவந்த உருண்டை கை தவறிக் கீழே விழுந்து உருண்டோடியது. அதைப் பிடிக்க ஏழு பேரும் விழுந்தடித்துக் கொண்டு அதன் பின்னால் ஓடினார்கள். அது ஒரு புதருக்குள் உருண்டோடி மறைவதற்கும், அங்கிருந்து ஒரு முயல் துள்ளிக் குதித்து வெளியே ஓடுவதற்கும் சரியாக இருந்தது.

"அதோ பார் குதிரைக்குட்டி" என்று ஜான் கத்த, அதைப் பிடிக்க மறுபடியும் அனைவரும் ஓடினர். அதற்குள் முயல் ஓடி மறைந்து விட்டது.

"மிகவும் அழகான குட்டி. அது மட்டும் ஐந்து வயதுக் குதிரையாக இருந்திருப்பின் எந்த சைத்தானாலும் அதைப் பிடிக்க முடியாது" என்று ஜான் சொல்ல அதை ஆமோதித்தபடி மற்ற சகோதரர்களும் சோகத்துடன் வீடு திரும்பினார்கள்.

ஒரு நாள் ஏழு சகோதரர்களில் ஒருவனான ஜேம்ஸ் என்பவன் கணப்பு அடுப்பில் நெருப்பு மூட்டி அதன் எதிரே நாற்காலியொன்றில் அமர்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தான். நன்கு எரிய வேண்டுமென்பதற்காக வைக்கோல் பிரியொன்றை அதில் திணிக்க, நெருப்பு கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. அப்போது அங்கு வந்த இளைய சகோதரன் அபு, "என்ன இது? கணப்பு இப்படி தீப்பிடித்து எரிகிறது. நீ இவ்வளவு அருகில் உட்கார்ந்திருக்கிறாயே, அப்படியே கருகிப் போய் விடுவாயே?" என்று கத்தினான்.

"நான் என்ன செய்வது?



இந்தக் கணப்பு அடுப்பைக் கொஞ்சம் தள்ளி வைத்துக் கட்டியிருந்தால் இந்தத் தொல்லை ஏற்பட்டிருக்காது. இப்போது பார். இதை அந்த மூலைக்குத் தள்ளி வைக்க முடியவில்லை" என்று சொன்னான் ஜேம்ஸ். அதற்குள் அந்த வீட்டைக் கட்டிய மேஸ்திரி கிப்ளின் அங்கே வந்தான்.

"நல்ல சமயத்துக்குத்தான் நீ வந்திருக்கிறாய். இதோ பார்! நீ கட்டிய கணப்பு அடுப்பின் லட்சணத்தை! இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தத் தீயின் வெப்பம் தாங்காமல் ஜேம்ஸ் கருகிச் சாகப் போகிறான். சீக்கிரமாக அதைக் கொஞ்சம் தள்ளிவை" என்று சொன்னான் அபு.

"நல்லது. என்னால் முடியும். ஆனால் நீயும் உன்னுடைய சகோதரனும் தயவு செய்து இங்கிருந்து வெளியே போய் கொஞ்ச நேரம் உலாவிவிட்டு வாருங்கள். அதற்குள் அதை நகர்த்தி வைத்து விடுகிறேன்" என்று சொன்னான் கிப்ளின்.

இருவரும் வெளியே சென்றனர். கணப்பு அடுப்பின் எதிரில் ஜேம்ஸ் அமர்ந்திருந்த நாற்காலியை அங்கிருந்து சற்றுத் தொலைவில் தள்ளி வைத்த கிப்ளின், இந்த வேலைக்காகச் சரியானபடி அவர்களிடமிருந்து கறந்து விட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

ஜேம்ஸும் அபுவும் திரும்பி வந்தவுடன் ஜேம்ஸை நாற்காலியில் அமரச் சொன்னான் கிப்ளின். "இப்போது கணப்பு அடுப்பிலிருந்து அனல் வீசுவது சரியாக இருக்கிறதா பார்!"

"நீ ஒரு நல்ல மனிதன். கொஞ்சமும் இடித்துத் தள்ளிய அடையாளமே தெரியாமல் அடுப்பை நகர்த்தி வைத்து விட்டாயே. பேஷ்! இந்த அருமையான வேலைக்குக் கூலியாக என்ன வேண்டுமானாலும் கேள். தருகிறேன்" என்றான் ஜேம்ஸ்.

சில விநாடிகள் யோசிப்பது போல் பாவனை செய்த மேஸ்திரி மெல்ல சொன்னான்: "உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் என்னுடைய நிலத்திற்குப் பக்கத்தில் உள்ள உங்கள் நிலங்களைக் கூலியாக கொடுத்தால் போதும்."

"நல்லது. அப்படியே கொடுக்கிறேன்" என்று சொல்லியவன் சிறிதும் யோசிக்காமல் அவனது பெயருக்குப் பத்திரம் தயார் செய்து கையெழுத்திட்டுக் கொடுத்தான். இப்படியே ஒவ்வொருவரும் அற்ப விஷயங்களுக்காகத் தங்களுடைய நல்ல நிலங்களையெல்லாம் இழந்தனர். கடைசியாக அவர்களுடைய தந்தை வாழ்ந்த பழைய மாளிகையில் ஏழு சகோதரர்களும் ஒன்றாக வசிக்கத் தொடங்கினார்கள்.

சாம்சனுக்கும் கிப்ளினுக்கும் இப்போது இவர்கள் வசித்து வரும் வீட்டின் மீதும் தோட்டத்தின் மீதும் கண் விழுந்தது. அவற்றையும் அபகரிப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அதிர்ஷ்டக் காற்று சாம்சன் பக்கம் வீசியது.

ஒரு நாள் மாலை அவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது ஏழு சகோதரர்களும் பாதையோரத்தில் கால்களை நீட்டியபடி வட்டமாக அமர்ந்து கொண்டிருந்தனர். ஆனால் ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்தாலும், அவர்களுடைய முகத்தில் குழப்பம் குடி கொண்டிருந்தது.

அவர்களைப் பார்த்ததும் ஏதோ பிரச்னை என்பதை உணர்ந்து கொண்ட சாம்சன், "இங்கே என்ன நடக்கிறது? எதற்காக இப்படி

ஓவியப் போட்டி!

பொருட்காட்சியை எல்லோரும் கண்டுகளித்திருப்பீர்கள். பொருட் காட்சியில் நீங்கள் கண்டு ரசித்த ஏதாவது ஒரு காட்சியை வண்ணத்தில் ஓவியமாகத்தீட்டி அனுப்புங்கள். (எ.கா: ராட்டினம், பொம்மை விற்பது, பெரிய அப்பளம் சாப்பிடுவது...) சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. மறவாமல் உங்கள் முகவரியைக் குறிப்பிடவும். கடைசி தேதி: **10.04.2003**

உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"எங்களால் எழுந்து கொள்ள முடிய வில்லை. ஏதோ ஒன்று எங்களை இழுப்பதைப் போல உணர்கிறோம்" என்று ஏழு பேரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

"என்னது, எழுந்திருக்க முடியவில்லையா? என்ன காரணமென்று நான் தெரிந்து கொள் ளலாமா?"

"இங்கே பார். எங்களுடைய கால்களெல் லாம் ஒன்றாக நடுவில் இருப்பது தெரிகிறதல் லவா? இவற்றில் என்னுடைய கால்கள் எவை? அவனுடைய கால்கள் எவை? என்று தெரியா மல் ஒவ்வொருவரும் முழித்துக் கொண்டிருக் கிறோம். எழுந்து கொள்ளலாமென்று பார்த் தால் யாருடைய கால்கள் யாருடன் வரு மென்று தெரியவில்லை. இதுதான் பிரச்னை" என்று சொன்னான் ஜான்.


இதைக் கேட்டதும் தனக்குள் எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்ட சாம்சன், இவர் களுடைய மாளிகையையும் தோட்டத்தையும் மேஸ்திரி கிப்ளின் அபகரித்துக் கொள்வதற்கு முன், நாம் ஏதாவது செய்து அபகரித்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

அனுதாபத்துடன் ஒவ்வொருவரையும் பார்ப் பது போல் பாவனை செய்த அவன், "எல்லோ ருடைய இடுப்பும் மேலே இருந்தாலும் யாரு டைய கால்கள் யாருக்குச் சொந்தம் என்று சொல்வது கஷ்டம்தான். ஆனால் இந்த விஷ யத்தில் உங்களுக்கு முன்பு பல முறை உதவி செய்தது போல் இந்த முறையும் என்னால் உதவிட முடியுமென்று நினைக்கிறேன். என்னைப் போல ஒரு நல்ல சிநேகிதன் மட்டும் இங்கு வராமலிருந்திருந்தால், உங்களைப் பொறுத்தவரை இன்று ஒரு மோசமான நாளா கத்தான் இருந்திருக்கும். சரி. அவரவர் கால் களைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் எனக்கு என்ன கொடுப்பீர்கள்?" என்று கேட்டான்.

" எதை வேண்டுமானாலும் கொடுக் கிறோம். முதலில் இங்கிருந்து நாங்கள் எழுந் தால் போதும்" என்று ஏழு பேரும் ஏகோபித்த குரலில் சொன்னார்கள்.

"உங்களால் இப்போது நீங்கள் வசிக்கும் மாளிகையையும் தோட்டத்தையும் எனக்குக் கொடுக்க முடியுமா?"

"காலம் முழுக்க இப்படியே இங்கேயே



மீன் கொத்திப் பறவை நீர் ஊற்று, ஆறுகளுக்கு அருகில் கூடு கட்டும். தான் உண்ணும் மீன்களின் முட்களைக் கொண்டு அது தனது கூட்டைக் கட்டு கிறது. இது, தான் பயன்படுத்தும் முட் களை மிகத் திறமையாக அடுக்குகிறது. மீன்கொத்திப் பறவையின் மூக்கு ஊசி போன்றது.


— என். ஜரீனா பானு

உட்கார்ந்து கொண்டு கஷ்டப்படு வதைவிட, நீ கேட்பதை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். சீக்கிரம் எங்களுக்கு உதவி செய்" என்றார்கள்.

"இதுதான் நியாயமான பேரம்" என்று சொன்ன சாம்சன், பாதை யோரமாகச் சென்று நல்ல தடிம னான கொம்பு ஒன்றை மரத்தி லிருந்து ஒடித்து எடுத்து வந்தான். ஏழு சகோதரர்களையும் தலை, கழுத்து, முதுகு என்று பாராமல் அந்தக் கொம்பினால் சுளீர் சுளீ ரென்று அடித்தான். அடிபட்ட வலி யைத் தாங்க முடியாமல் அனைவரும் துள்ளிக் குதித்து எழுந்தனர். அந்த வேதனையிலும் அவரவர் கால்கள் அவரவர்களுக்குக் கிடைத்து விட் டதே என்ற சந்தோஷத்தில் எழுந்து ஓடினர்.

தங்களிடமிருந்த கடைசி சொத் தான அந்த மாளிகையையும் தோட் டத்தையும், தங்களுடைய அறியாமை யினால் சாம்சனுக்குத் தாரை வார்க்க வேண்டியதாகி விட்டது.

● மிகக் கொடிய நோய் — பேராசை — இரா. வினோத் குமார், வே. கார்த்திக், காரைக்கால்



முதல் பரிசு :
டி.ஜி.சிவப்ரியா,
ஆறாம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி,
காஞ்சிபுரம்.

வண்ணத் தூரிகை

நெருப்புக் கோழி என்ற தலைப்பில் மார்ச் இதழில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஐந்து ஓவியங்கள் இங்கே...



இரண்டாம் பரிசு :
எஸ்.காயத்ரி,
ஏழாம் வகுப்பு,
நகர மேல்நிலைப்பள்ளி,
கும்பகோணம்.




மூன்றாம் பரிசு :
எஸ்.ஸ்ரீவித்யா,
ஏழாம் வகுப்பு,
நகர மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்.

நெருப்புக் கோழி



ஆறுதல் பரிசு :
ஸ்ரீ.அபிநயா,
ஒன்பதாம் வகுப்பு,
ஏ.யு.பி.ஈ.டி. சின்மயா
வித்யாலயா மெட்ரிக்
பள்ளி, பாளையங்கோட்டை



ஆறுதல் பரிசு :
சொ.ருக்மணி சிந்து,
எட்டாம் வகுப்பு,
டேனியல்
தாமஸ் மெட்ரிக் பள்ளி,
திசையன்விளை,
திருநெல்வேலி
மாவட்டம்.



பால் பொங்குவது ஏன்?

அன்புள்ள ஜக்கு...

● **ஆ. வனிதா, நல்லூர்**

? பரீட்சை நெருங்கிவிட்டது. காலையிலும் இரவிலும் கண் விழித்துப் படிக்கிறேன். ஆனால் மனத்தில் பதிய மாட்டேங்கிறது. மறுநாள் அனைத்தும் மறந்து விடுகிறது. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ஜக்கு?

முதலில் நீங்கள் செய்ய வேண்டியது 'நமக்கு மறதி இருக்கிறது' என்பதை மறந்துவிடுவதுதான். பிறகு தன்னம்பிக்கையுடன் படிக்க ஆரம்பியுங்கள். படித்தவற்றை உடனே எழுதிப் பார்த்து விடுங்கள். இப்படி எழுதிப் பார்த்தால் மறக்கவே மறக்காது. இது என் அனுபவம். உங்களுக்கும் நன்றாகப் பலனளிக்கும் வனிதா. முயன்று பாருங்கள். முன்னேற்றம் நிச்சயம்.

● **சி. சிவகண்மணி, நெய்விளக்கு.**

? தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர்கள் செய்திகள் அடங்கிய தாளை ஒப்புக்குப் பார்த்து விட்டு, பிறகு நம்மைப் பார்த்தபடியே செய்திகளைப் படபடவென வாசிக்கிறார்களே, எப்படி?

தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவரின் முன்னால் டிஸ்பிளே ஸ்கிரீன் (Display Screen) இருக்கும். அதில் செய்திகள் பெரிய எழுத்துகளில் வலம் வரும். அதை இயக்குவதற்கான ரிமோட், செய்தி வாசிப்பவரின் கையில் இருக்கும். அவர்கள் படிக்கும் வேகத்திற்கு ஏற்ப ரிமோட்டை இயக்கி செய்திகளை வாசிப்பார்கள். டிஸ்பிளே ஸ்கிரீனில் ஏதாவது கோளாறு திடீரென ஏற்பட்டால் அதைச் சமாளிப்பதற்குத்தான் கையில் செய்திகள் அடங்கிய தாளை வைத்திருக்கிறார்கள்.

● **ஆ. சந்தியா, நல்லூர்.**

? உனக்கு ஃப்ரெண்ட்ஸ் இருக்கிறார்களா ஜக்கு?

! எனக்கு நிறைய ஃபிரெண்ட்ஸ் இருக்கிறார்கள். அதில் நல்லூரிலிருக்கும் சந்தியாவும் ஒருவர்.

● **ஆர். நந்தன், திருத்துறைப்பூண்டி.**

? ஜக்கு, உன்னை மாதிரி விலங்குகளுக்கு ரத்த வகைகள் உண்டா?

K, L, M, N என்று ரத்த வகைகள் உண்டு நந்தன்.

● **எம். வினோத், சங்கரன்கோவில்.**

? பால் ஏன் பொங்குகிறது?

பாலில் புரதம், கொழுப்புப் பொருள்,

சர்க்கரைப் பொருள்கள் மற்றும் அனங்கக அயனிகள் உள்ளன. பாலைச் சூடேற்றும் போது அதிலுள்ள நீர் தன் கொதி நிலையை அடைந்தவுடன் ஆவியாகி வெளியேறுகிறது. அதேசமயம் பாலில் உள்ள புரதம் மற்றும் கொழுப்புப் பொருள் கள் பிரிந்து இலேசாகி மேற்புறத்தில் ஏடு போலப் படியும். மேலும் பால் சூடாகும் போது அதிலுள்ள நீர் ஆவியாகும். மேலே உள்ள ஏடு நீராவியினை வெளியேறாமல் தடுக்கும். இதனால் நீராவி விரிவடைந்து மேலெழும்பும். இதையே நாம் பொங்குவது என்கிறோம்.

● **வி. பவானி செல்வி, சேலம்.**

? மாங்குரோவ் காடுகள் தமிழ்நாட்டில் உண்டா ஐக்கு?

கடலூர் மாவட்டத்தில் கடற்கரை ஓரமாக பிச்சாவரம் இருக்கிறது. இதில் மாங்குரோவ் காடுகள், அடர்ந்த சதுப்பு நிலப்பகுதியில் அமைந்திருக்கின்றன. இது சுற்றுலாத் தலங்களில் ஒன்று.

● **ஜி. கார்த்திகா, தென்காசி**

? என் நெருங்கிய தோழி வாசுகி. கடந்த சில நாட்களாக என்னுடன் சரி யாகப் பேசுவதில்லை. எனக்கு இதை நினைத்து மிகவும் வருத்தமாக இருக் கிறது. ஏதாவது வழி சொல்லேன் ஐக்கு!

முதலில் வாசுகி பேசாமல் இருப்பதற் கான காரணத்தைக் கண்டுபிடியுங்கள். சமீ பத்தில் நடந்த நிகழ்ச்சிகளை நினைவு படுத்திப் பாருங்கள். ஏதாவது ஒரு விஷ யம் உங்களை அறியாமல் தோழியை வருத் தமடையச் செய்திருக்கலாம். காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. வாசுகியிடம் சென்று கார ணத்தைக் கேளுங்கள். தோழி சொல்லும் காரணம் சரி என்றால் தவறை ஒத்துக் கொண்டு மன்னிப்புக் கேட்டு விடுங்கள். காரணம் தவறு என்றாலோ, தவறாகப் புரிந்து கொண்டிருந்தாலோ உங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துக் கூறுங்கள். எதையும் பேசித் தீர்த்துக் கொள்வதுதான் நல்லது. அப்பொழுதான் நட்பு தொடரும். 'ஒருவர் பொறை, இருவர் நட்பு' என்பது தமிழ்ப் பழமொழி. ஒருவர் கோபப்படும்போது மற்றவர் பொறுத்துப் போக வேண்டும் என்று பொருள்.

1000/- ரூபாய்
பரிசுப் போட்டி முடிவு!

நிறைய பேர் பிப்ரவரி இதழில் அறி வித்த போட்டியில் கலந்து கொண்டனர். ஆனால் முக்கால் வாசிப்பேர் புகைப் படத்தில் இருப்பவரின் பெயரில் தவறு செய்திருந்தனர். சரியான விடை எழுதியவர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பரிசு பெற்றவர்கள் :

1. ஸ்டேன்லி செபாஸ்டின், ஒன்பதாம் வகுப்பு, லயோலா மேல் நிலைப் பள்ளி, குப்பையநல்லூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

2. எஸ். ஜெயலக்ஷ்மி, நான்காம் வகுப்பு, ஸ்ரீமாதா மெட்ரிகுலேசன் பள்ளி, கும்பகோணம்.

3. இரா. சாருமதி, ஒன்பதாம் வகுப்பு, புனித மேரி மெட்ரிக் பள்ளி, கடலூர்.

4. டி. ராம்பிரசாத், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல் நிலைப்பள்ளி, காரைக்கால்.

5. ஷா. ஷமரியா, பதினோராம் வகுப்பு, அமலா மகளிர் மேல்நிலைப் பள்ளி, தக்கலை.

சரியான விடை :

1. ஜிம்பாப்வே - ஹராரே
2. ஜியோ - பூமி
3. முதல் மாடர்ன் ஒலிம்பிக்ஸ் - ஏதென்ஸ்
4. காளிதாசர் - சாகுந்தலம்
5. கியூபா - சர்க்கரை கிண்ணம்
6. வந்தே மாதரம் - பங்கிம் சந்திர சட்டர்ஜி
7. வாய்
8. அலர் மேல் வள்ளி

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட் டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி


10. மாலா தேடிய மாயப் பெண்

கதை: விஜி


படம்: சேகர்





பாட்டி! மன்னர் தீரசேனன், பொன்னி, திலகனை நான் உடனே சந்திக்கணும்.
நீ களைப்பா இருப்பே. ஓய்வெடு.
இல்லை. அவர்களிடம் விடைபெற்று என் தந்தையை நான் பார்க்க வேண்டும்.
மந்திர சக்தி எனக்கு வந்துவிட்டது. அவர்களை இங்கே வர வழைக்கிறேன்.
பாட்டி மந்திரத்தைக் கூறினாள். உடனே குள்ள ராஜா, கிளி, நாய் அங்கு வந்தனர்.
பாட்டி, இவர்களைப் பழைய நிலைக்கு மாற்றுங்கள்.
ஒரு நொடியில் மாற்றிடறேன்.
மூவரும் பழைய நிலையை அடைந்தனர்.



மாலா, உனக்கு எப்படி நாங்கள் நன்றி கூறப் போகிறோம் என்று தெரியவில்லை.
இந்தக் கழுகு, முதலை, பாட்டிக்குத்தான் நன்றி சொல்லணும். நான் கிளம்புகிறேன் அரசே!
நான் சொன்னது போல் என் பாதி நாட்டை உனக்குத் தருகிறேன்.
நாடும், தங்கப் பந்தும் உனக்குத்தான். நாங்களும் உன்னுடன் வருகிறோம்.
பந்து கொடுத்தால் போதும்.
பாட்டி, எனக்கு விடை கொடுங்கள்.
நீ எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். என்ன உதவி வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறோம். போய் வா மாலா!
கழுகு, முதலையிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினர்.


மறுநாள் மகிபாலரின் அரண்மனையை அடைந்தனர்.
மாலா, எப்படி இருக்கே?
அப்பா, நான் நன்றாக இருக்கிறேன். இவர் மன்னர் தீரசேனன். சித்தி, இதோ உங்கள் தங்கப் பந்து.
மாலா மகிபாலருக்கு நடந்ததை விவரித்தாள். விருந்து முடிந்த பின் -
உங்கள் பெண்ணை என் மருமகளாக்கிக் கொள்ள விரும்பு கிறேன்.
எனக்கும் மகிழ்ச்சி தீரசேனரே!
மாலா — திலகன் திருமணம் நடைபெற்றது. இருவரும் நல்ல முறையில் நீண்ட காலம் ஆட்சி செய்தனர்.
(முற்றும்)



ஜனாதிபதி விருது!

"சிறுவர் சிறுமியர் வீரச் செயல்கள் புரிந்தால் ஜனாதிபதி விருது கிடைக்கும்" என்றான் கோவிந்தன்.

"நமது ஜனாதிபதிக்கு மாணவர்களிடம் ரொம்பப் பிரியம்; டில்லியில் ராஷ்டிரபதி மாளிகையில் உபசாரம் பலமாயிருக்கும்" - ஃபிலிப்.

"புது சொக்காய், உல்லன் ஸூட் எல்லாம் வாங்கிக் கொடுப்பாங்க. அங்கே இப்படி சாதா உடையில் போக முடியுமா?" - ராகவ்.

"இந்தக் கோடை விடுமுறையில் நாமும் வீரச் செயல்கள் புரிய முயற்சி பண்ணலாம்" - கோவிந்தன்.

மற்ற இரு நண்பர்களும் சிரித்தார்கள். "இந்தப் பட்டிக்காட்டில் நூற்றைம்பது பேர் வாழற ஊரில் வீரச் செயலுக்கு என்ன வாய்ப்பு?"

ஆனால் அந்தச் சந்தர்ப்பம் ஏற்படவே செய்தது. கிராமத்தின் எல்லையில் பெரிய தாமரைத் தடாகம். ஒரு பக்கம் பெண்கள் துறை. மறுபுறம் ஆண்கள். பெண்கள் துறையில் கரையிலிருந்து சில அடி தூரத்தில் ஒரு ஆழமான மடு இருந்தது. எல்லாருக்கும் தெரியும். ஆனால் தாயார் கவனிக்காத போது ஏழு வயது ஏகாம்பரம் அதில் காலை வைத்து விட்டான். இழுத்துவிட்டது. சில வினாடிகள் தாமதத்தில் கவனித்த தாயார் அலறினாள் : "ஐயோ புள்ளை! புள்ளை!"

அதிர்ஷ்டவசமாக எதிர்துறைக்குக் குளிக்க வந்திருந்த நண்பர்கள் மூவரும் ஓட்டமாய் ஓடி வந்தார்கள். ஃபிலிப் உடனே தடாகத்தில் இறங்கி முன்னேறினான்.

ராகவ் அவனைத் தடுத்தான் "கோவிந்தா! மூணு பேர் துண்டையும் இரண்டாகக் கிழி. ஒன்றுடன் ஒன்று முடிச்சுபோடு" என்றான். தானும் செயல்பட்டான். ஃபிலிப்பின் இடுப்பில் ஒரு முனையை இறுக்கிக் கட்டினான், "இப்ப நட" என்றான். மறுமுனையைப் பற்றிக் கொண்டு மற்ற இருவரும் அவனை மடுவின் எல்லை வரை தொடர்ந்தனர். ஃபிலிப் முங்கி சிறுவனின் முடியைப் பற்றிக் கொண்டு மேலே வந்தான். தாமரைக் கொடியில் கால் சிக்கியது. ஆனால் நண்பர்களுக்குத் துண்டை அசைத்து சமிக்ஞை செய்யவே இழுத்துக் கரை சேர்த்தனர். இதற்குள் கூடிவிட்ட கிராமத்துப் பெரியோர்கள் குழந்தை ஏகாம்பரத்துக்கு முதலுதவி செய்து காப்பாற்றினர்.

நண்பர்கள் மூவருக்கும் ஜனாதிபதி பரிசு கிடைத்ததா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இந்தக் கதை எந்த இரு திருக்குறள்களின் அடிப்படையில் அமைந்தது என்பதை நீங்கள் எழுதி பூர்த்தி செய்தாலே, மூன்று நண்பர்களுக்கும் ஜனாதிபதி பரிசு கிடைத்த மாதிரி!

ஆக்கம் ______ ______ ______
______ அறிவுடை யார்
தெரிந்த ______ தேர்ந்தெண்ணிச் ______
அரும்பொருள் ______ ______

- தம்பிப் பயல்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No.WPP 304 * Registered as a Newspaper in Srilanka